ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



ஸ்ரீ ஸூக்திமாலா　　　　　　மலர் 27

திருமங்கையாழ்வார் அருளிய

திருவெழுகூற்றிருக்கை

[பெரியவாச்சான்பிள்ளை அருளிய
இரு வ்யாக்யானங்கள், விவரணத்துடன்]

பதிப்பாசிரியர்:—

ஸ்ரீ. S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,
அட்வகேட்,
3. புத்தூர் அக்ரஹாரம். திருச்சி-17.

ஸ்ரீநிவாஸம் பிரஸ், புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.

திருமங்கையாழ்வார் திருநக்ஷத்ர தனியன்

வ்ருஸ்சிகே க்ருத்திகா ஜாதம் சதுஷ்கவி ஶிகாமணிம் ।
ஷட்ப்ரபந்தக்ருதம் ஶார்ங்க மூர்த்திம் கலிஹமாஶ்ரயே ॥

[கார்த்திகையில் கார்த்திகை நன்னாளில் அவதரித்தவரும், நாலு கவிப்பெருமாளும், ஆறு பிரபந்தங்களை அருளியவரும், ஶார்ங்கமென்னும் வில்லின் அம்ஸமுமான கலிகன்றியை ஆஶ்ரயிக்கிறேன்.]

★

திருமங்கையாழ்வார் நித்ய தனியன்

கலயாமி கலித்வம்ஸம் கவிம் லோக திவாகரம் ।
யஸ்ய கோபி: ப்ரகாஶாபி: ஆவித்யம் நிஹதம் தம: ॥

[தமது விளங்காநிற்கும் வாக்குகளாகிற கிரணங்களால் அஞ்ஞானவிருளை அழிப்பவராய், (அதனாலேயே) உலகுக்கோர் ஸூர்யனாயிருப்பவரான கலிகன்றியென்னும் திருமங்கையாழ்வாரை தியானிக்கிறேன்.]

★

திருமங்கையாழ்வார் வாழித்திருநாமம்

கலந்ததிருக் கார்த்திகையில் கார்த்திகை வந்தோன் வாழியே
காசினியி லொண் குறையலூர்க் காவலோன் வாழியே
நலந்திக ழாயிரத்தெண்பத்து நாலுரைத்தான் வாழியே
நாலைந்து மாறைந்தும் நமக்குரைத்தான் வாழியே
இலங்கெழு கூற்றிருக்கை யிரு மட லீந்தான் வாழியே
இம்மூன்றிற் பாட்டிரு நூற்றிருபத்தே ழிசைத்தான் வாழியே
வலந்திகழுங் குமுதவல்லி மணவாளன் வாழியே
வாட்கலியன் பரகாலன் மங்கையர்கோன் வாழியே.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

திருவெழுகூற்றிருக்கை வ்யாக்யானங்கள்

முன்னுரை

[ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், 'ஸுதர்ஶனம்' ஆசிரியர்,
3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-17.]

நாலு வேதங்களை நாலு திவ்யப்ரபந்தங்களாக அருளிச்செய்து "வேதம் தமிழ் செய்த மாறன்" என்னும் பெரும் புகழைப் பெற்றவர் நம்மாழ்வார். அந்த நாலு வேதங்களுக்கு ஆறு அங்கங்கள் அமைந்ததுபோலே, இந்த நாலு வேதங்களுக்கும் ஆறு அங்கங்களாக அமைந்தவை 'ஆறங்கங்கூற அவதரித்த'வரான திருமங்கையாழ்வாரின் ஆறு பிரபந்தங்கள். "பெரியதிருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறியதிருமடல், பெரியதிருமடல், திருநெடுந்தாண்டகம்" என்னும் அடைவிலே அவதரித்த அவ்வாறு பிரபந்தங்களிலே மூன்றாவது ப்ரபந்தமாகும் இத்திருவெழுகூற்றிருக்கை. வேதங்களைத் தெளிவுபடுத்தும் வேதாங்கங்களைப்போலே—நம்மாழ்வார் தமது பிரபந்தங்களில் சொன்ன அர்த்தங்களையே திருமங்கையாழ்வார் தமது ப்ரபந்தங்களில் தெளிவுபடுத்துகிறார் என்னும் காரணத்தாலேயே இவருடைய ப்ரபந்தங்கள் அவருடைய ப்ரபந்தங்களுக்கு அங்கங்களாகக் கீர்த்திக்கப்படுகின்றன. அவற்றில், நம்மாழ்வார் அருளிய எந்த அர்த்தத்தை, அதிலும் குறிப்பாக எந்தத் திருவாய்மொழியில் சொல்லப்படும் அர்த்தத்தை இத்திருவெழுகூற்றிருக்கையிலே எப்படித் தெளிவுபடுத்துகிறார் திருமங்கையாழ்வார் என்னும் கேள்வி எழுகிறது. இதற்கு பதிலை இம்முன்னுரையில் முதலில் சுருங்கக்கூறிப் பிறகு விளங்கவைப்போம். அர்த்தபஞ்சங்களை விளக்கும் தமிழ் வேதங்களான நம்மாழ்வாரின் திவ்ய ப்ரபந்தங்களில் "நோற்ற நோன்பு" [5-7] முதலான நாலு திருவாய்மொழிகளிலும், "உலகமுண்டபெருவாயா" [6-10] என்னும் திருவாய்மொழியிலும் விளக்கப்படும் உபாயஸ்வரூபமாகிற அரும்பொருளை, அதிலும் குறிப்பாக "ஆராவமுதே" [5-8] என்னும் திருவாய்மொழியில் சொல்லப்படும் அர்த்தத்தை இத்திருவெழுகூற்றிருக்கையிலே திருமங்கையாழ்வார் தெளிவுபடுத்துகிறார் என்பது முற்கூறிய கேள்விக்குச் சுருக்கமான பதில். எப்படித் தெளிவுபடுத்துகிறார் என்பதை விளங்கவைப்போம் இனி.

"எம்பெருமானுடைய திருவடிகளில் அவனுகப்புக்காகவே செய்யப்படும் கைங்கர்யமே பரமப்ராப்யம்; அதை அடைவதற்கு உபாயமாக நம்கையில் அணுவளவும் இல்லை. நிர்ஹேதுக கிருபையை உடைய அவன் ஒருவனே உபாயம்" என்பது ஸகலஶாஸ்த்ரங்களிலும், ஆழ்வார்களுடைய திவ்ய ப்ரபந்தங்களிலும் காணப்படும் பரமஸாரமான அர்த்தமாகும். இவ்வறிவையுடையவர்களே உண்மையான ப்ரபந்நராவர். அநாதிகாலமாகப் பழகிப்போந்த ஸ்வார்த்த பரதையாகிற சுயநல மனப்பான்மையாலும், அதனால் ஏற்படும் ஸ்வப்ரவ்ருத்திபரதையாகிற தன் முயற்சியில் ஈடுபாட்டாலும் மயங்கிவிடுகிறார்கள் சிலர். அவர்களில் சிலர் பரமபதத்திலும் எம்பெருமானை அநுபவிப்பதினாலும், மற்றும் சிலர் அவனுக்குக் கைங்கர்யம் செய்வதினாலும் தங்களுக்கு ஏற்படும் ஆனந்தத்தை உத்தேஶ்யமாக மயங்குகிறார்கள். அவ்வானந்தத்திற்கு உபாயமாகத் தாங்கள் அநுஷ்டிக்கும் பக்தி முதலானவற்றை முந்தியவர்களும், ஶரணாகதியாகிற ஸ்வகதஸ்வீகாரத்தைப் பிந்தியவர்களும் உபாயமாக மயங்குகிறார்கள். அன்னவர்களுக்கும் இந்த மயக்கத்தைத் தீர்ப்பதற்காகக் கடுமையான நியமங்களோடும், இந்த ஜீவாத்மாவின் அத்யந்தபாரதந்த்ர்யமாகிற ஸ்வரூபாநுஸந்தானத்தோடும் கூடியவையாய், வேதாந்த ஸித்தங்களான பக்தியோகத்தையும், ந்யாஸவித்யையாகிற உபாயப்ரபத்தியையும் (முறையே) விதிக்கிறான் எம்பெருமான். முற்கூறிய அநாதிவாஸனையாலே (முறையே) அந்த ஸ்வார்த்த பகவதநுபவத்திலோ, ஸ்வார்த்த பகவத் கைங்கர்யத்திலோ அவர்களுக்கு விருப்பம் மாறவில்லையாகில், அவர்கள் விருப்பப்படி பரமபதத்திலும் அவர்களுக்கு அப்பலன்களையே அளித்து விடுகிறான். ஸ்வாத்மாநுபவத்தையே விரும்பும் கைவல்யார்த்தியைப்போலே, நிரதிஶயபுருஷார்த்தமான பரார்த்தாநுபவ கைங்கர்யங்களை அவர்களும் பெறுவதில்லை. "தாம் அநுஷ்டிக்கும் எதிலும் உபாயத்வலேஶகந்த ப்ரஸங்கமுமில்லை. நிர்ஹேதுகக்ருபையோடு கூடிய எம்பெருமான் ஒருவனே மோக்ஷோபாயம்" என்னும் உண்மையை அறிந்தவர்களாய், பரார்த்த கைங்கர்யத்தில் ருசியைத் தெரிவிப்பதற்காகத் தாம் அநுஷ்டிக்கும் ஶரணாகதியை அநுஷ்டிக்கும்

போதே அந்த ஸ்வீகாரம் எம்பெருமானுடைய க்ருஷிபலமாயிருப்பதேயொழிய உபாயமன்று என்று அநுஸந்திப்பவர்களாய், இக்காரணத்தாலேயே ஸித்தோபாயநிஷ்டர்கள் என்றும், பரகதஸ்வீகாரநிஷ்டர்கள் என்றும் புகழப்படுபவர்களான தலைசிறந்த ப்ரபந்நர்களே எம்பெருமானுடைய நிர்ஹேதுக க்ருபை யொன்றினாலேயே பரார்த்த கைங்கர்யமாகிற அப்பரமபுருஷார்த்தத்தைப் பெறுகிறார்கள்.—என்னும் திவ்யார்த்தம் ஆழ்வார்களுடைய திவ்ய ப்ரபந்தங்களாகிற திருப்பாற்கடலைக் கடைந்து பிள்ளை லோகாசார்யர் ஸ்ரீவசநபூஷணமாகிற திவ்யஶாஸ்த்ரத்திலே திரட்டிக்கொடுதத ஆராவமுதமாகும். இவ்வர்த்தத்தையே நம்மாழ்வார் முற்கூறிய ஐந்து திருவாய்மொழிகளிலும் காட்டியருளினர். அதையே இத்திருவெழுகூற்றிருக்கையிலே தெளிவுபடுத்துகிறார் திருமங்கையாழ்வார் என்பது இவற்றைப் பூர்வாசார்ய வ்யாக்யானங்களோடு சுவைப்பவர்களுக்கு எளிதில் விளங்கும். இவ்வைந்து திருவாய்மொழிகளுக்குள்ளும் குறிப்பாக ஆராவமுதாழ்வாரைப் பற்றிய "ஆராவமுதே" [5-8] என்னும் திருவாய்மொழியின் அர்த்தத்தைத் தெளிவுபடுத்துவது அவ்வாராவமுதனைப் பற்றிய இத்திருவெழுகூற்றிருக்கை என்பது இதையும் அத்திருவாய்மொழியையும் சேர்த்துப் படிப்பவர்களுக்கு எளிதில் விளங்கும். இதை அன்பர்கள் அறிந்து கொள்வதற்காகவே இம்முன்னுரையை ஒட்டி "ஆராவமுதே" என்னும் அத்திருவாய்மொழியை அளித்து, அதற்குப்பின் திருவெழுகூற்றிருக்கையை வ்யாக்யானங்களோடு அளிக்கிறோம்.

"ஒரு பேருந்தி" என்று தொடங்கி, "அயனை ஈன்றனை" "வாளியின் அட்டனை" "மூவுலகளந்தனை" "அரந்தையைத் தீர்த்தனை" "ஏழுலகு எயிற்றினில் கொண்டனை" "அறுசுவைப் பயனுமாயினை" "ஐம்படை அங்கையுள் அமர்ந்தனை" "அறிதுயில் அமர்ந்தனை" "வருணமும் ஆயினை" "பூதமும் நீயே" "ஏழ்விடை செற்றனை" "அறிவரு நிலையினை" "ஐம்பாலோதியை ஆகத் திருத்தினை" "அறமுதல்....விரிந்து நின்றனை" என்று சேதனனைப்பெற அநாதிகாலமாகப் பலவிதமாகக் க்ருஷி செய்துவரும் எம்பெருமான் பக்கலிலேயே உபாயபாவம்

பரிபூர்ணமாயிருப்பதையும், தன் கையில் ஏதுமில்லாதிருப்பதையும் காட்டி, "மாற்றுரு வினையே" என்று நிர்ஹேதுக கிருபையாலே அவனே ஸம்ஸாரஸம்ப$_3$ந்த$_4$த்தை அறுத்துத் தரவேணும் என்பதை உணர்த்தி, "அடியிணை பணிவன்" என்று அவன் திருவடிகளையே அதற்கு உபாயமாக உறுதிகொள்ளுவதை விளக்கும் இப்பிரப$_3$ந்த$_3$ம் உபாயஸ்வரூபத்தைத் தெளிவுபடுத்துவதுபோலே வேறு எப்பிரப$_3$ந்த$_4$மும் தெளிவுபடுத்தவில்லையன்றோ. இது இப்பிரப$_3$ந்த$_4$த்தின் அர்த்த$_2$த்தின் சீர்மையாகும்.

இனி, ஶப்$_3$த$_3$விசித்திரங்களும் நிறைந்தது இப்பிரப$_3$ந்த$_4$ம் என்பதும் இதை அநுஸந்தி$_4$ப்பார்க்கு எளிதில் விளங்கும். ஒன்று முதல் ஏழு வரையில் உள்ள எண்கள் ஏறி இறங்கி வருவதையும், அதனாலேயே இது 'எழுகூற்றிருக்கை' என்னும் பெயருள்ள சித்திரகவியாயிருப்பதையும், இப்பிரப$_3$ந்த$_4$ம் ரத$_2$ப$_3$ந்த$_4$மாய் அமைக்கத்தக்கதாயிருப்பதையும் பழைய நாலாயிர தி$_3$வ்யப்ரப$_3$ந்த$_4$ மூலப்பதிப்புகளிலும், ஸ்ரீ காஞ்சி ஸ்வாமியின் தி$_3$வ்யார்த்த$_2$தீ$_3$பிகையுரையிலும் காணலாம்.

இத்தகைய அருமைபெருமைகளையுடைய இந்த தி$_3$வ்யப்ரப$_3$ந்த$_4$த்திற்குப் பரமகாருணிகரான பெரியவாச்சான் பிள்ளை இரண்டு வ்யாக்$_2$யானங்கள் அருளியிருப்பது நமது ஸௌபா$_4$க்$_3$யப$_2$லமாய் விளங்குகிறது. முதல் வ்யாக்$_2$யானத்தை உபந்யஸித்தபிறகு வந்துசேர்ந்து அநுவர்த்தித்த (மெனக்கிட்ட) ஸ்ரீ வைஷ்ணவருக்கு இரண்டாவது வ்யாக்$_2$யானத்தைப் பெரியவாச்சான்பிள்ளை உபந்யஸித்ததாக அதன் தலைப்பிலிருந்து விளங்குகிறது.

இவ்விரு வியாக்கியானங்களோடும், இவற்றின் பொருளைத் தெளிவுபடுத்தும் விவரணத்தோடும் கூடிய இத்திருவெழுகூற்றிருக்கையின் அச்சுவேலை ஒரே மாதத்தில் பூர்த்தியாகி, பரித$_4$ாவி பங்குனி உத்திரத்தில் நிறைவு பெற்றது பரகாலகவியின் பேரருளாலேயேயாகும்.

பரித$_4$ாவி	த$_3$ாஸன்,
பங்குனி உத்திரம்	ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,
(19—3—73)	'ஸுத$_3$ர்ஶனம்' ஆசிரியர்.

திருக்குடந்தை ஆராவமுதன் விஷயமாக

நம்மாழ்வார் அருளிச்செய்த

திருவாய்மொழி (5-8)

ஆராவமுதே யடியேனுடலம் நின்பாலன்பாயே,
நீராயலைந்து கரையவுருக்கு கின்றநெடுமாலே,
சீரார்செந்நெல் கவரிவீசும் செழுநீர்த் திருக்குடந்தை,
ஏரார்கோலம் திகழக்கிடந்தாய் கண்டேனெம்மானே. 1

எம்மானேயென் வெள்ளைமூர்த்தி யென்னையாள்வானே,
எம்மாவுருவும் வேண்டுமாற்று லாவாயெழிலேறே,
செம்மாகமலம் செழுநீர்மிசைக்கண் மலரும் திருக்குடந்தை,
அம்மாமலர்க்கண் வளர்கின்றானே யென்நான்செய்கேனே. 2

என்நான்செய்கேன் யாரேகளைகண்(ண்)ணையென்செய்கின்றாய்,
உன்னாலல்லால் யாவராலு மொன்றும் குறைவேண்டேன்,
கன்னார்மதிள்சூழ் குடந்தைக்கிடந்தா யடியேனருவாணாள்,
சென்னாளெந்நா ளந்நாளுனதாள் பிடித்தேசெலக்காணே. 3

செலக்காண்கிற்பார் காணுமளவும் செல்லும்கீர்த்தியாய்,
உலப்பிலானே யெல்லாவுலகு முடையவொருமூர்த்தி,
நலத்தால்மிக்கார் குடந்தைக்கிடந்தா யுன்னைக்காண்பான்நான்,
அலப்பாய், ஆகாசத்தைநோக்கி யழுவன்தொழுவனே. 4

அழுவன்தொழுவ னாடிக்காண்பன் பாடியலற்றுவன்,
தழுவல்வினையால் பக்கம்நோக்கி நாணிக்கவிழ்ந்திருப்பன்,
செழுவொண்பழனக் குடந்தைக்கிடந்தாய் செந்தாமரைக்கண்ணா,
தொழுவனேனை யுனதாள்சேரும் வகையேசூழ்கண்டாய். 5

சூழ்கண்டாயென் தொல்லைவினையை யறுத்துன்னடிசேரும்,
ஊழ்கண்டிருந்தே, தூராக்குழிதூர்த் தெனைநாளகன்றிருப்பன்,
வாழ்தொல்புகழார் குடந்தைக்கிடந்தாய் வானோர்கோமானே,
யாழினிசையே யமுதேயறிவின் பயனேயரியேறே. 6

அரியேறேயென் னம்பெற்சுடரே செங்கட்கருமுகிலே,
எரியேபவளக் குன்றே நாற்றேர ளெந்தாயுனதருளே,
பிரியாவடிமை யென்னைக்கொண்டாய் குடந்தைத்திருமாலே.
தரியேனினியுன் சரணந்தந்தென் சன்மங்களையாயே. 7

களைவாய்துன்பம் களையாதொழிவாய் களைகண்மற்றிலேன்.
வளைவாய்நேமிப் படையாய் குடந்தைக் கிடந்தமாமாயா,
தளராவுடல மென்னதாவி சரிந்துபோம்போது.
இளையாதுனதா ளொருங்கப்பிடித்துப் போதவிசைநீயே. 8

இசைவித்தென்னை யுன்தாளிணைக்கீ ழிருத்துமம்மானே.
அசைவிலமரர் தலைவர்தலைவா ஆதிப்பெருமூர்த்தி
திசைவில்வீசும் செழுமாமணிகள் சேரும்திருக்குடந்தை.
அசைவிலுலகம் பரவக்கிடந்தாய் காணவாராயே. 9

வாராவருவாய் வருமென்மாயா மாயாமூர்த்தியாய்
ஆராவமுதா யடியேனுவி யகமேதித்திப்பாய்.
தீராவினைகள் தீரவென்னை யாண்டாய் திருக்குடந்தை,
ஊரா. உனக்காட் பட்டுமடியே னின்னமுழல்வேனே. 10

உழலையென்பின் பேய்ச்சிமுலையூ டவளையுயிருண்டான்.
கழல்களவையே சரணக்கொண்ட குருகூர்ச்சடகோபன்,
குழலில்மலியச் சொன்ன வோரா யிரத்துளிப்பத்தும்.
மழலை தீர வல்லார்காமர் மானேய்நோக்கியர்க்கே. 11

திருவாய்மொழியில் ஐந்தாம் பத்து எட்டாம்
திருவாய்மொழி நிறைவுபெற்றது.
நம்மாழ்வார் திருவடிகளே ஶரணம்.

வேதம் தமிழ்செய்த மாறனின் இத்திருவாய்மொழிக்கு விவரணமாய் அமைந்ததாய். 'மாறன் பணித்த தமிழ் மறைக்கு ஆறங்கம் கூற அவதரித்த மங்கையர்கோன்' அருளியதான திருவெழுகூற்றிருக்கை, தனியன் வ்யாக்$_{2}$யானத்தோடும், பரமகாருணிகரான பெரியவாச்சான்பிள்ளை அருளிய இரு வ்யாக்$_{2}$யானங்களோடும். 'ஸுத$_{3}$ர்ஶனம்' ஆசிரியர் இயற்றிய விவரணத்தோடும். பதவுரை அரும்பதவுரைகளோடும் இனி அளிக்கப்படுகிறது.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பிள்ளைலோகம் ஜீயரருளிச்செய்த

திருவெழுகூற்றிருக்கைத் தனியன்

வ்யாக்யானம்

4-8-05

அவதாரிகை:— எம்பெருமானுக்குத் திருமதிள்போலே அரணாயிருப்பதான ஆறு ப்ரப$_{3}$ந்த$_{4}$ங்கள் செய்தருளின ஆழ்வாருடைய திருநாமங்கள் பலவற்றையும் சொல்லி அவரை வாழ்த்துகிறது இதில். "प्रत्यक्षे गुरवः स्तुत्याः" (ப்ரத்யக்ஷே கு$_{3}$ரவஸ் ஸ்துத்யா:) என்னக்கடவதிறே. ஆழ்வார்கள் அர்ச்சாவதாரமாய் எப்போதுமெல்லார்க்கும் ப்ரத்யக்ஷராயிறேயிருப்பது.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

'ஸுத$_{3}$ர்ஶந' பத்ராதி$_{4}$பர் இயற்றிய

திருவெழுகூற்றிருக்கைத் தனியன்

வயாக்$_{2}$யான விவரணம்

அவதாரிகை:— எம்பெருமானுக்குத் திருமதிள்போலே அரணாய் (ரக்ஷகமாய்) இருப்பவையான பெரியதிருமொழி. திருக்குறுந்தாண்டகம். திருவெழுகூற்றிருக்கை. சிறிய திருமடல். பெரியதிருமடல். திருநெடுந்தாண்டகம் என்னும் ஆறு பிரபந்தங்கள் அருளிச்செய்த ஆழ்வாருடைய திருநாமங்கள் பலவற்றையும் சொல்லி அவருக்கு மங்க$_{3}$ளாஶாஸநம் செய்கிறது இத்தனியனில். "ஆசார்யர்கள் நேரில் துதிக்கத்தக்கவர்கள்" என்று ப்ரமாணம் கூறுகின்றது. இவ்வாழ்வாரும் அர்ச்சாவதாரமாய் தி$_{3}$வ்யதே$_{3}$ஶங்களில் ப்ரத்யக்ஷமாய் எழுந்தருளியிருக்கிறார். அத்தகைய இவருக்குப் பல்லாண்டு பாடுகிறது இத்தனியன் என்கை.

எம்பெருமானாரருளிச்செய்த தனியன்

வாழி பரகாலன் வாழி கலிகன்றி,
வாழிகுறையலூர் வாழ்வேந்தன்,—வாழியரோ
மாயோனை வாள்வலியால் மந்திரங்கொள்மங்கையர்கோன்
தூயோன் சுடர்மான வேல்.

பரகாலன்—புறமதத்தவர்கட்கு யமன்போன்ற திருமங்கையாழ்வார், வாழி—வாழ்ந்திடுக; கலிகன்றி—கலியைக் கெடுத்த திருமங்கையாழ்வார், வாழி—வாழ்ந்திடுக. குறையலூர்—திருக்குறையலூர். வாழ்—வாழும்படி. வேந்தன்—(அதன்) அரசரான திருமங்கையாழ்வார். வாழி—வாழ்ந்திடுக; மாயோனை—எம்பெருமானிடத்தினின்று. வாள் வலியால்—தமது வாளின் வலிமையினால். மந்திரம் கொள்—திருமந்திரத்தைப் பெற்றவராயும். தூயோன்—அகப்புறத் தூய்மையுடையராயுமிருக்கிற, மங்கையர்கோன்-திருமங்கையாழ்வாரது. சுடர்—ஒளிபொருந்தியதும். மானம்—பெருமை பொருந்தியதுமான. வேல்—வேலானது. வாழி—வாழ்ந்திடுக. (அரோ—அசை.)

வ்யாக்2யாநம்:—(வாழிபரகாலன்) ப4க3வத்3த்3விட்டுக்களான ப்ரதிகூலர்க்குக் காலனானவர் வாழி. (வாழிகலிகன்றி) கலிதோ3ஷ நிவாரகர் வாழி. (குறையலூர் வாழ்வேந்தன்—வாழி) திருக்குறையலூரை அவதாரஸ்த2லமாக உடையராய். அது வாழும்படிக்கு அத்தை நோக்குகிற ராஜாவென்னுதல்; அங்கே வாழுகிறவரென்னுதல். (மாயோனை வாள்வலியால் மந்திரங்கொள் மங்கையர்கோன் தூயோன் சுடர் மானவேல்-வாழியரோ) என்று-ஆழ்வாரையும், அவர் திருக்கையில் வேலையும் ஒருகாலே ஆஶாஸித்தபடி. (மாயோனை) அரங்கத்தரவணைப் பள்ளிகொள்ளும் மாயோனையிறே வாள்வலியால் மந்திரங்கொண்டது. தென்னரங்கன்தன்னை வழிபறித்த வாளனிறே. கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டவரிடத்திலேயிறே மந்திரப்பொருள் கைக்கொண்டது. மந்திரத்தைப்பற்றி

வ்யாக்2யாநம்:—(வாழி பரகாலன்) பரகாலன் என்று பெயர்பெற்ற ஆழ்வார்க்குப் பல்லாண்டு. பரர் (பிறர்) என்று ப4க3வானை த்3வேஷிக்குமவர்களைச் சொல்லுகிறது. அவர்களுக்குக் காலன்போலே ப4யங்கரராயிருப்பதால் இவர் பரகாலனாகிறார். (வாழிகலிகன்றி) கலிகன்றி [கலியின் குற்றத்தைப் போக்கவல்லவர்] என்று பெயர்பெற்றவருக்குப் பல்லாண்டு. (குறையலூர் வாழ்வேந்தன் வாழி) திருக்குறையலூரைப் பிறப்பிடமாகவுடையவராய், அவ்வூர்வாழும்படி அதை ரக்ஷிக்கிற அரசனாயிருப்பவர் வாழ்க. அவ்வூரில் வாழ்கிறவர் என்றும் பொருள் கொள்ளலாமாயினும், தன் ஆட்சியாலே அவ்வூருக்கு வாழ்ச்சியளிப்பவர் என்னும் முதற்பொருளே சிறப்புடையது. இனி அவருக்கும் அவரது வேலுக்கும் ஒருசேரப் பல்லாண்டு பாடுகிறார்,—(மாயோனை வாள்வலியால் மந்திரங்கொள் மங்கையர்கோன் தூயோன் சுடர்மான வேல்) என்று. (மாயோனை) "கடியரங்கத்தரவணையில் பள்ளிகொள்ளும் மாயோனை" [பெருமாள் திருமொழி 1-2] என்று குலசேகராழ்வாரால் பாடப்பட்ட ஆஶ்சர்யபூ4தனான மாயோனையன்றோ தனது வாள்வலியைக் காட்டி வெருட்டி இவர் மந்திரோபதே3ஶம் பெற்றார். "வாழி சுழி பொறித்த நீர்ப்பொன்னித் தென்னரங்கன் தன்னை வழி பறித்த வாளன் வலி" [இயல் சாத்து 2] என்று இவர் வாள்வலியாலே மந்திரங்கொண்டது தென்னரங்கனிடமே என்றல்லவோ சொல்லப்படுகிறது. "கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர் செய்ப் புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்" [நாச்-திரு 11-6] என்கிறபடியே தன்னை ஆசைப்பட்டவர்களின் கையிலிருப்பதையெல்லாம் அபஹரிக்கும் அவரிடமே திருமந்திரப்பொருளை அபஹரித்த இவரது திறமையை என்னென்று புகழ்வது? "அந்தணர் மாட்டந்தி வைத்த மந்திரம்" [திருநெடு 4] என்று மந்திரமாகச் சொல்லப்படும் எம்பெருமானைப் பற்றியன்றோ இவர்

யிறே மந்திரங்கொண்டது. (மங்கையர்கோன்) மங்கை மன்னனிறே. (தூயோன்) தூய்மையென்னும் பா3ஹ்யாப்4யந்தர ஶுத்3தி4யையுடையவர். "அங்கமலத்தடவயல் சூழாலிநாடனருள்மாரியரட்டமுக்கியடையார்சீயம் கொங்கு மலர்க்குழலியர்வேள் மங்கைவேந்தன் கொற்றவேல் பரகாலன் கலியன்" என்று தாமே தம் திருநாமங்களைக் கூறினாரிறே. (சுடர்மானவேல்) தேஜோரூபமான. மான வேல்—பெரியவேல். திருமங்கை மன்னன் எடுக்கும்படியான வேல். (வாழியரோ) இத்தால்—ஆழ்வாரோபாதி ஆயுத4மும் ஆஶாஸ்யமென்றபடி. "நின் கையில் வேல்

திருமந்திரத்தைக் கொண்டார். (மங்கையர்கோன்) திருமங்கை நாட்டுக்கு மன்னனன்றோ இவர். (தூயோன்) அநந்யார்ஹஶேஷத்வம் [எம்பெருமானைத் தவிர வேறெவர்க்கும் அடிமைப்படாமலிருக்கை] அநந்யஶரணத்வம் [எம்பெருமானைத் தவிர வேறு எதையும் உபாயமாகக் கொள்ளாதிருக்கை], அநந்யபோ4க்3யத்வம் [எம்பெருமானைத் தவிர வேறு எதையும் அநுப4விக்கத்தக்கதாகக் கொள்ளாதிருக்கை] முதலான அகத்தூய்மைகளையும், பஞ்சஸம்ஸ்காரம் உடையராயிருக்கை முதலான புறத்தூய்மைகளையும் உடையவர். இப்பாசுரத்தில் இவர்க்குச் சொல்லப்பட்ட திருநாமங்களையும் பெருமைகளையும் மற்றும் பலவற்றையும் "அங்கமலத்தடவயல்சூழ் ஆலிநாடன் அருள்மாரி அரட்டமுக்கி அடையார் சீயம் கொங்குமலர்க் குழலியர்வேள் மங்கை வேந்தன் கொற்றவேல் பரகாலன் கலியன்"[பெரியதிருமொழி 3-4-10]என்று இவ்வாழ்வார்தாமே அருளிச்செய்தாரன்றோ. (சுடர் மான வேல்) சோதியுருவான பெரிய வேல். பிரகாசத்திலும் பெருமையிலும் திருமங்கைமன்னன் கைக்கொள்ளத் தகுதியுடைய வேல் என்றபடி. (தூயோன் வேல் வாழியரோ) ஆழ்வாரைப்போலே அவரது வேலும் பல்லாண்டு பாடத்தக்கது என்று கருத்து. "நின் கையில் வேல் போற்றி" [திருப்பாவை 24] என்று கண்ணனுக்குப் பல்லாண்டு

போற்றி" என்னக்கடவதிறே. இதுதான். கொற்ற வேலாகையாலே வெற்றிவேலாயிருக்கும். அத்தாலே—இதின் விஜயத்தை வேண்டுகிறது.

பிள்ளைலோகம் ஜீயரருளிச்செய்த
திருவெழுகூற்றிருக்கைத் தனியன் வ்யாக்2யாநம் முற்றிற்று.

பாடினவர்கள் அவன் கையில் வேலுக்கும் பல்லாண்டு பாடினார்களன்றோ. இவ்வேலின் பெருமையை "கொற்ற வேல்" [பெரியதிரு 3-4-10] என்று ஆழ்வாரே அருளிச்செய்தாராகையாலே மற்ற வேல்களைப்போலே தோல்வி காணுமல் இது வெற்றிவேலாகவேயிருக்கும். ஆயினும் தமது பரிவின் மிகுதியாலே இவர் இதற்கும் பல்லாண்டு பாடுகிறார்.

திருவெழுகூற்றிருக்கைத்
தனியன் வ்யாக்2யான விவரணம் முற்றிற்று.

மற்றொரு தனியன்

[இத்தனியனுக்குப் பிள்ளைலோகம் ஜீயர் வ்யாக்2யானமில்லை.
ஆகையால் இதற்குப் பதவுரை மாத்திரம் கொடுக்கப்படுகிறது.]

சீரார்திருவெழு கூற்றிருக்கையென்னும் செந்தமிழால்,
ஆராவமுதங் குடந்தைப்பிரான்ற னடியிணைக்கீழ்,
ஏரார்மறைப்பொரு ளெல்லாமெடுத்திவ் வுலகுய்யவே,
சோராமற்சொன்ன வருள்மாரிபாதம் துணைநமக்கே.

சீர்—சொற்பொருள் சிறப்புகளாலே. ஆர்—நிறைந்த. திருவெழுகூற்றிருக்கை என்னும் — திருவெழுகூற்றிருக்கை என்று பெயர்பெற்ற. செம் தமிழால் — அழகிய தமிழ்நூலால், ஆராவமுதன் — ஆராவமுதன் என்று பெயர்பெற்ற குடந்தை பிரான்தன் — திருக்குடந்தைப் பெருமானுடைய, அடி இணை கீழ் — இரு திருவடிகளின் விஷயமாக, ஏரார் மறை பொருள் எல்லாம் எடுத்து-(அபௌருஷேயத்வம் முதலான) சிறப்புக்களுடைய வேத3ங்களில் சொன்ன அர்த்2ஙங்கள் அனைத்தையும் விளங்கக்காட்டி, இவ்வுலகு உய்யவே — இவ்வுலகம் உஜ்ஜீவிக்கும்படி, சோராமல் சொன்ன — ஒன்று விடாமல் சொன்ன, அருள்மாரி — அருள்மழையாம் திருமங்கையாழ்வாருடைய பாதம — திருவடிகளே, நமக்கு துணை — நமக்குத் தஞ்சமாகும்.

திருவெழுகூற்றிருக்கைக்குப்

பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த வ்யாக்2யாநம்

ப்ரவேஶம்

ஸம்ஸாரஸ்வபா4வாநுஸந்தா4நத்தாலே மிகவும் அவஸந்நரான ஆழ்வார் அதுக்குப் பரிஹாரமாக அவன்

ஸுத3ர்ஶந பத்ராதி4பர் இயற்றிய

தி3வ்ய ப்ரப3ந்த4 ஸாரம்

திருவெழுகூற்றிருக்கை விவரணம்

நாலுவேத3ங்களை நாலு தி3வ்யப்ரப3ந்த4ங்களாக்கி யருளினார் வேத3ம் தமிழ் செய்த மாறன். அவ்வேத3ங்களுக்கு அமைந்த ஆறு அங்க3ங்கள் போலே இவ்வேத3ங்களுக்கு ஆறங்க3ங்கூறினார் திருமங்கையாழ்வார் தமது ஆறு தி3வ்யப்ரப3ந்த4ங்களாலே.

அவற்றில் முதலான பெரிய திருமொழியில்—எம்பெருமான் பரமரஸிகரான தம்மைத் தன் அழகைக்காட்டித் திருத்தியபடியையும், திருமந்திரத்தையும், அதன் பொருளான பரத்வஸௌலப்4யாதி3 கல்யாண கு3ணங்களையும், ஸௌலப்4யாதி3 கல்யாண கு3ணங்களுக்கு எல்லை நிலமான அர்ச்சாவதாரங்களையும் காட்டிக்கொடுக்கக் கண்டு அநுப4வித்த படியையும், ஸம்ஸாரத்தில் தமக்கு வெறுப்பு ஏற்படுவதற்காக அதன் தாழ்வைக் காட்டிக்கொடுக்க, "மாற்றமுள" [11-8] என்னும் கடைசித்திருமொழியிலே "இருபாடு எரி கொள்ளியின் உள் எறும்பேபோல்" [4] என்றும், "பாம்போடு ஒரு கூரையிலே பயின்றாற்போல்" [3] என்றும், "வெள்ளத்திடைப்பட்ட நரியினம் போலே" [5] என்றும், "காற்றத்திடைப்பட்ட கலவர் மனம் போல்"

அரு:— ப்ரவேஶே—திருமொழியில்—உகந்தருளின நிலங்களை அநுப4வித்துப் பரமபத3த்தையும் ஸம்ஸார ஸ்வபா4வத்தையும்

கு3ணங்களை நெஞ்சாலே நினைத்தும் வாயாலே பேசியும், திருவடிகளிலே விழுந்தும் த4ரித்தார். "இங்ஙனே கிடந்து

---

[2] என்றும், "ஆற்றங்கரை வாழ் மரம்போல்" [1] என்றும், ஸம்ஸாரத்தின் தாழ்வை நினைத்து மிகவும் அஞ்சி நடுங்கித் தள்ளாடி உருகித் தாம் வருந்தியபடியையும் அறிவித்தார் ஆழ்வார்.

இரண்டாவது ப்ரப3ந்த4மான திருக்குறுந்தாண்டகத்திலே—கோடை வெய்யிலால் வருந்தியவர்கள் குளிர் நீரிலே விழுந்து நீரைக்குடிப்பதும், அதை வாரி மேலே இறைத்துக் கொள்வதும் செய்வது போலே, "மாற்றமுள" திருமொழியில் கூறியபடி ஸம்ஸாரமாகிற கடுங் கோடை வெய்யிலால் வருந்திய தாமும் அவ்வெப்பத்திற்குப் பரிஹாரமாக, எம்பெருமானும், அவனது கு3ணங்களுமாகிற குளிர் நீரிலே குடைந்தாடி, "என் மனத்து வந்த விதியினை...விடுகிலேனே" [1] "குணங்கொண்டுள்ளம் கூறு நீ கூறுமாறே" [2] என்று நெஞ்சாலே நினைத்தும், "நின்னையே பரவுவேனே" [11] என்று வாயாலே பேசியும், "கண்ணிணை களிக்குமாறே" [13] என்று கண்ணாலே கண்டும் "மைந்தனை வணங்கினேனே" [3] என்று திருவடிகளிலே விழுந்து தலையாலே வணங்கியும் "வாக்கினால் கருமந்தன்னால் மனத்தினால் சிரத்தைதன்னால் வேட்கை மீதூரவாங்கி விழுங்கினேற்கு" [4] என்கிறபடியே ஸர்வகரணங்களாலும் ஈடுபட்டும் உயிர் த4ரித்தார். இந்நிலையிலே திருவெழுகூற்றிருக்கையாகிற இம்மூன்றாவது பிரபந்தம் அவதரிப்பதற்குறுப்பாக ஆழ்வார்க்கும் எம்பெருமானுக்கும் பின்வருமாறு ஓர் ஸம்வாத3ம் ஏற்பட்டது;—

மறந்திருக்க "நீரிருக்கிறது ஸம்ஸாரங்கிடீர்" என்று மாற்றமுளவிலே காட்ட, ப்ரதிகோடியை யநுஸந்தி4த்துவந்த ஆற்றாமையாலே "வாக்கினால் கருமந் தன்னால் மனத்தினால் சிரத்தை தன்

நோவுபடும் உமக்குத்தான் செய்யவேண்டுவதென்?'' என்று கேட்க, ''த்வத3நுப4வவிரோதி4யாயிருக்கிற ஸம்ஸாரத்தை வாஸனையோடே போக்கித்தரவேணும்'' என்ருர்; ''அதுபின்னை நம்மால் செய்யலாவதன்றே'' என்ன.

பரமகாருணிகரான பெரியவாச்சான்பிள்ளை
மெனக்கிட்ட ஸ்ரீவைஷ்ணவருக்காக ஸாதித்தருளின

வ்யாக்யாநம்

அவதாரிகை

முதலிலே கரணகளேப3ரவிது4ரமாய், தமோபூ4தமாய், அவிஜ்ஞேய ஸ்வரூபமாய், அசித்கல்பமாயிருக்கிற இவற்றை, அர்த்தி2த்வாதி3 நிரபேக்ஷமாக உன்னுடைய நிரவதி4கத3யையாலே உண்டாக்கின நீயேயருளிக் கடாக்ஷியாயாகில், **"अमूनि भुवनानि भवितुं नालं"** (அமூநி பு4வநாநி ப4விதும் நாலம்) முதலிலே இவையுண்டாகவேமாட்டாது. ஸத்தையே தொடங்கி உன்னதீ4நமான பின்பு உன்னையொழிய இவற்றுக்கு ஒரு ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி கூடாதென்னுமிடம் சொல்லவேணுமோ? இதில்லாதவன்று உண்டாக்கின நீயே இதுக்கொரு போக்கடி பார்க்கையொழிய நானென்றுசெய்து உன்னைப்பெறுகையென்ருெரு பொருளுண்டோ?

எம்பெருமான்—இவ்வண்ணமாக மிக வருந்தும் உமக்கு நான் செய்யவேண்டியது என்ன?

ஆழ்வார்—திருக்குறுந்தாண்டகத்திலே தேவரீரை அடியேன் ஒருவாறு அநுப4வித்தேனுயினும், அவ்வநுப4வம் பூர்ணமாக ஏற்படாதபடி இந்த ஸம்ஸாரஸம்ப3ந்த4ம் தடையாயுள்ளது. இதை வாஸனையோடே நீக்கியருளவேணும்.

எம்பெருமான்— அரிய பெரிய ஸாத4னங்களை அநுஷ்டி2த்து அதை நீர் போக்கிக் கொள்ள வேணுமேயொழிய, நீர் கேட்ட மாத்திரத்தில் நான் உமக்கு அதைப்போக்கிவிட முடியாதே!

னுல்'' என்று திருக்குறுந்தாண்டகத்திலே கரணத்ரயத்தாலும் அநுப4வித்து த4ரிக்கப்புக, அதில் த4ரிக்கப்புகாமையாலே இதிலே ஶரணம் புகுகிருரென்றபடி.

''உன்னையொழிந்த ஸகல பதா3ர்த்த2ங்களினுடைய

ஆழ்வார்— எம்பெருமானே! ஸ்வார்த்த2தையாகிற சுயநல மனப்பான்மையிலும் அதற்கு உறுப்பான ஸ்வப்ரவ்ருத்தியாகிற தன்முயற்சியிலும் எனக்குப் பற்று உள்ளதோ என்று சோதிப்பதற்காக நீ சொல்லும் வார்த்தை இது என்பதை நான் அறியேனே! உடைமையான என்னை உடையவனுன நீ அடைவதற்கு அநாதி3காலமாக எத்தனை பாடுபட்டு வருகிருய்? எனக்குச் சில இன்பங்களை நான் ஸாதி4த்துக்கொள்வதாக நினைத்து எதையாவது செய்து, நீ படும் பாடுகளை ஸப2லமாகாதபடி தடுத்துவீணுக்கிவருவதையன்ருே அநாதி3காலமாக என் முயற்சிகளால் நான் செய்து வருகிறேன். என்னையும் என்னைப் போன்ற மற்ற சேதனரையும் பெறுவதற்கு அநாதி3காலமாக நீ எத்தனை பாடுபட்டு வருகிருய்? ப்ரளயகாலத்திலே தே3ஹேந்திரியங்களற்றவர்களாய், 'அவிப4க்ததமஸ்' என்னும் பெயருடன் உன்னேடு ஒன்றியிருந்த அசேதனதத்துவமான மூலப்ரக்ருதியோடு பிரித்துக்காண வொண்ணுதபடி கலந்திருந்தோமன்ருே நாங்கள்; இப்படி அசேதனப் பொருளை ஒத்திருந்த எங்களை, நாங்கள் யாசிக்காமலிருந்தபோதே உன்னுடைய எல்லையற்ற கருணையாலே, தே3ஹேந்திரியங்களோடே படைத்து நிர்ஹேதுககிருபையாலே நீயே அருள் செய்து கடாக்ஷிக்காவிடில், 'இவ்வுலகங்கள் உண்டாகவேமாட்டா' [ஸ்தோ-ர 10] என்று சொல்லலாம்படி நாங்கள் ஒரு பொருளாக உண்டாகவே மாட்டோமே. இப்படி எங்களுடைய ஸத்தை முதலாக அனைத்துமே உன்னதீ4னமானபின்பு, உன்னையொழிய எங்களுக்கு ஒரு முயற்சியாகிற ப்ரவ்ருத்தியும், முயற்சியினின்றும் கைவாங்குதலாகிற நிவ்ருத்தியும் ஏற்படமாட்டாது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? இப்படி எதுவுமே என்னதீ4னமல்லாதபோது என்னை உண்டாக்கின நீயே என்னை ரக்ஷிக்க ஒரு வழிதேட

உத்பத்தி யென்ன, ரக்ஷணமென்ன, இவற்றுக்குக் கடவையாய், ஸர்வஸமாஶ்ரயணீயனுய், ஆபத்ஸக$_2$னுயிருக்கிற

[சரணுமறைபயந்த இத்யாதி$_3$] ஜ்ஞாநாதி$_4$கனை சதுர்முக$_2$னேடேகூட உத்பத்தி விநாஶாதி$_3$களுக்குக் கர்மீப$_4$விக்கிற ஸகல சேதநர்க்கும் ரக்ஷையென்று பெற்றபெற்றவையெல்லாம், "நம்மேல் வினைகடிவான்" என்கிறபடியே ஆஶ்ரித விரோதி$_4$ நிரஸநத்துக்காகக் கையிலே திருவாழியை த$_4$ரித்துக்கொண்டிருக்கிற உபகாரகனை அவன் பார்க்கில் பார்க்குமித்தனையல்லது, வேறு கடல் சூழ்ந்த பூ$_4$மியிலுள்ள சேதநர் தங்களுக்கு ரக்ஷை தாங்களறியார்கள். அவனையொழிய இவையறியாதொழிய வேண்டுகிறதென்

வேண்டுமேயொழிய நான் ஒரு கார்யம் செய்து உன்னைப் பெறுவது என்று பேசத்தான் முடியுமோ? இதையேயன்றோ

'சரணுமறை பயந்த தாமரையானேடு
மரணுய மன்னுயிர்கட்கெல்லாம்—அரணுய
பேராழிகொண்ட பிரானன்றி மற்றறியாது
ஓராழி சூழ்ந்த உலகு', *[முதல் திருவ 60]*

என்று பொய்கையாழ்வார் அருளிச்செய்தார். உலகினர் உய்வதற்கு உபாயங்களை உபதே$_3$ஶிக்கும் வேத$_3$த்தை அளித்த ஞானச்சிறப்புடைய பிரமன் முதலாகப் பிறப்பிறப்புக்களுக்கு ஆளாகும் எல்லாச் சேதனர்க்கும் ரக்ஷை என்று பேர்பெற்ற ஒவ்வொரு காரியத்தையும் "நம்மேல் வினைகடிவான் எப்போதும் கைகழலாநேமியான்" [பெரிய திருவ 87] என்கிறபடியே அடியாருடைய விரோதி$_4$களை அழிப்பதற்கு உறுப்பாக எப்போதும் திருவாழியாழ்வானை ஏந்திக்கொண்டிருக்கும் உபகாரகனை நீ செய்தால் செய்யலாமேயொழிய, கடல்சூழ்ந்த இவ்வுலகில் உள்ள வேறு எவரும் தங்களுக்கு ரக்ஷை எது என்பதைத் தாங்கள் அறியக்கூடமாட்டார்களே! தங்களுக்குத் தாங்கள் ரக்ஷையைச் செய்துகொள்ள எப்படி முடியும்?

நீயே என்னுடைய ஸம்ஸாரது$_3$:க்க$_2$த்தைக் கழித்துத் தரு

னென்னில்— "**नैव किञ्चित् इत्यादि**" (நைவ கிஞ்சித் இத்யாதி$_3$) உனக்குப் பரோக்ஷமாயிருப்பதொன்றில்லை; எத்தனையேனும் ஜ்ஞாநாதி$_4$கரா யிருப்பார்க்கும் நீ கண்ணுக்கு விஷயமாகாய்; உனக்குக் கைபுகுராதது ஒன்றுமில்லை; எத்தனையேனுமதிஶயித ஜ்ஞாநர்க்கும் நீ கைபுகுந்தாயாயிராய். இத்தால் சொல்லிற்றுயற்றதென்னென்றுல், ஒருவனுக்குக் கண்ணும் தோற்றுதே காலும் நடைதாராதே யிருப்பது, ஒருவனுக்குக் கண்ணுந்தோற்றிக் காலும் நடைதருவது, இப்படியிருந்தால் ஆர் வழி காட்டிக்கொடு

எம்பெருமான் — *ஜ்ஞாநாதி$_4$கர் பலர் இருக்கும்போது வேறு எவரும் தங்கள் ரக்ஷையைத் தாங்கள் அறியக்கூடமாட்டார்கள் என்று எப்படிச் சொல்லலாம்?*

ஆழ்வார்–"**நைவ கிஞ்சித் பரோக்ஷம் தே ப்ரத்யக்ஷோऽஸி ந கஸ்யசித்| நைவ கிஞ்சித$_3$ஸித்$_3$த$_4$ம் தே ந ச ஸித்$_3$தே$_4$ाऽஸி கஸ்யசித்||**" *[ஜிதந்தே 1-6] [உனக்கு ப்ரத்யக்ஷமல்லாததாயிருப்பது எதுவுமில்லை; நீ எவர்க்கும் (தம் முயற்சியாலே) ப்ரத்யக்ஷமாக (கண் முதலானவற்றுல் அறியத்தக்கவனுக) ஆகிறுயல்லை; உனக்கு அடையமுடியாதது எதுவுமில்லை; எவர்க்கும் (தம் முயற்சியாலே) நீ அடையமுடியாதவனுயிருக்கிறுய்.] என்கிறபடியே உன்னுல் அறியவும், அடையவுமாகாதது எதுவுமேயில்லை என்னும்படி ஸர்வஜ்ஞனுய், ஸர்வஶக்தியாயிருந்தாய் நீ; எத்தனையேனும் சிறப்புற்ற ஜ்ஞாநஶக்தியுடையாரும் உன்னைத் தம் முயற்சியால் அறியவோ அடையவோ பார்த்தால் அவர்களால் அறியவோ, அடையவோ முடியாதவனுகவே யிருக்கிறுய் நீ. உனக்கும் எங்களுக்கும் உள்ள வாசி எப்படியிருக்கிறதென்பதை ஓர் உதா$_3$ஹரணத்தால் விளக்கலாம். ஒருவனுக்குக் கண்ணும் குருடாய் காலும் முடமாயிருக்கிறது; ஒருவன் நல்ல கண் பார்வையையும் நடையையும் உடையவனுயிருக்கிறுன். இப்படியிருக்கும் இருவரில் இரண்டாமவன் வழிகாட்டினுலொழிய முதலவனுலே தன் காரியம்*

மித்தனையல்லது என்றால் கழித்துக்கொள்ளப்போகாது''

போவார்கள்? நான் அஜ்ஞனாய் அஶக்தனாயிருந்தேன்; நீ ஸர்வஜ்ஞனாய் ஸர்வ ஶக்தியாயிருந்தாய்; இங்ஙனே யிருந்தபின்பு நீ என் கார்யஞ்செய்து தலைக்கட்டு மித்தனை போக்கி நான் என் கார்யம் செய்து தலைக்கட்டுகை என்றொரு பொருளுண்டோ? என்கிறார். நீ தந்த ஜ்ஞாநங்கொண்டு அறியப் பார்த்தாலும் அறிந்தபடி செய்து தலைக்கட்டுகைக் கீடான ஶக்தியெனக்குண்டோ?

அவதாரிகை முற்றிற்று.

எதையும் தான் செய்துகொள்ள முடியாதன்றோ. அதுபோலே நான் அறிவொன்றுமில்லாத குருடனாய், எதுவும் செய்யமுடியாத அஶக்தியுடைய நொண்டியாயிருப்பவன். ''ஸர்வஜ்ஞ: ஸர்வவித்'' என்று வேத$_3$மே ஓதுகின்றபடி நீ எல்லாமறிந்தவனாய், எல்லாம் வல்லவனாயிருக்கிறாய். இப்படியிருக்கும்போது, நீ என் காரியத்தைச் செய்து முடிக்கவேண்டுமேயொழிய, நான் என் காரியத்தைச் செய்து முடிப்பதற்குச் சிறிதாவது இடமுண்டோ? நீ அளித்த அறிவுகொண்டு ஒருவாறு அறிந்தாலும், அறிந்தபடி செய்து முடிக்கவல்ல ஶக்தி எனக்கு உண்டோ? ஆகையால், உன்னைத் தவிர்ந்த எல்லாப்பொருள்களின் உத்பத்தி, ரக்ஷணம் முதலான அனைத்தையும் செய்பவனாய், பிரமன் உருத்திரன் முதலிய அனைவராலும் ஆஶ்ரயிக்கப்படுபவனாய், அவர்களுக்கு வரும் ஆபத்துக்கள் ஒவ்வொன்றிலும் துணைபுரிகின்றவனாயிருக்கிற நீயே என்னுடைய ஸம்ஸாரத் துன்பத்தைக் கழித்துத் தரவேணுமேயொழிய என்னால் அதைக் கழித்துக்கொள்ள அடியோடு ஆகாது.'— என்று எம்பெருமான் திருவடிகளிலே விழுந்து தம் போக்கடியற்ற நிலையை எம்பெருமானிடம் அறிவிக்கும் ப்ரப$_3$ந்த$_4$மே இத்திருவெழுகூற்றிருக்கையாகும்.

புதையலிருக்குமிடத்தைக் காட்டிக்கொடுக்கும் செப்பேட்டைக்கையிலே கொடுத்து, அதைக்கொண்டு புதையலைக்

என்று திருவடிகளிலே விழுந்து தம் த$_3$ஶையை அறிவிக்கிறாரா யிருக்கிறது.

அவதாரிகை முற்றிற்று.

காட்டிக்கொடுப்பாரைப்போலே, திருமந்திரத்தையும் (திருவஷ்டாக்ஷரத்தையும்) அதில் ப்ரதா$_4$நார்த்த$_2$மான ஸௌலப்$_4$யம் முதலான கு$_3$ணங்களுக்கு எல்லைநிலமான அர்ச்சாவதார ஸ்த$_2$லங்களான கோயில்களையும் காட்டிக்கொடுக்க, திருப்பிரிதி தொடங்கித் திருக்கோட்டியூரீறாகவுள்ள அவையனைத்தையும் கண்டு, இதற்குமேல் எதுவும் தேவையில்லாதவராய், ஸம்ஸாரத்தையும் பரமபத$_3$த்தையும் ஒருசேர மறந்துவிட்டார் இவ்வாழ்வார் பெரியதிருமொழி யநுப$_4$வத்தின் பெரும்பகுதியிலே. ''அர்ச்சாவதாராநுப$_4$வத்தில் மூழ்கி, ஸம்ஸாரத்தின் கொடுமையையும், இவ்வநுப$_4$வம் நித்யமாய் நடப்பதற்குப் பரமபத$_3$த்திற்குச் செல்லவேண்டும் என்னும் உண்மையையும் இவர் மறந்துவிட்டாரே! இவர்க்கு இந்த ஸம்ஸாரத்தின் கொடுமையை உணர்த்துவோம்'' என்று திருவுள்ளங்கொண்ட எம்பெருமான், குழந்தைக்கு அஜீர்ணத்தைப்போக்கிப் பசியை விளைத்துச் சோறிடும் தாயைப்போலே, இவர்க்குப் பரமபத$_3$ம் செல்வதில் ஆசையை உண்டாக்கி அங்கேகொண்டுபோவதற்காக, ''மாற்றமுள'' என்னும் கடைசித் திருமொழியிலே ஸம்ஸாரத்தின் கொடுமையைக் காட்டினான். அதின் கொடுமையை அநுஸந்தி$_4$த்து, ஆற்றாமையாலே.

விபூ$_4$தித்$_3$வயத்தையும் மறந்து, த்ருதீய விபூ$_4$தியான தி$_3$வ்ய தே$_3$ஶங்களை அநுப$_4$விக்கிற இவர்க்கு ஈஶ்வரன் ஸம்ஸாரத்தில் கொடுமையைக் காட்டுவானென்னென்னில், ''இவ்வநுப$_4$வம் அவிச்சி$_2$ந்நமாகவேணும்'' என்று நினைத்து, அது அங்கேயொழியக்கூடாமையாலே, ஆமத்தையறுத்துப் பசியை விளைப்பித்துச் சோறிடுவாரைப்போலே விடாயைப் பிறப்பித்து அங்கே கொடுபோகைக்காகக் காட்டினானென்று ஶங்காபரிஹாரங்கள் கண்டுகொள்வது.

பெரி-வ்யா:— (ஒருபேரித்யாதி$_3$) ஸ்வவ்யதிரிக்த ஸமஸ்த வஸ்துக்களுக்கும் அத்$_3$விதீயகாரணமாய், அதுக்குத்தக்க பரப்பையுடைய திருநாபி$_4$யிலே. அப்பரப்படங்கலும் கண் செறியிட்டாற்போலே பெருத்திருக்கிற மலராகிற ஆஸநத்திலே, ஒருகால் இதரவிஸஜாதீய ஜந்மாவான சதுர்முக$_2$னை யுண்டாக்கினாய். ஒருகாலென்றாலும் ப்ரவாஹரூபேண நித்யமா யிருக்குமிறே. “नावेक्षसे” (நாவேக்ஷஸே).

ஆழ்வார்க்கு முதலிலே செப்பேட்டைக் கையிலே கொடுத்து நிதி$_4$யைக்காட்டிக் கொடுப்பாரைப்போலே திருமந்த்ரத்தையும் அதிலர்த்த$_2$த்துக்கெல்லை நிலமாகக்கோயில்களையும் காட்டிக் கொடுக்கக்கண்டு க்ருதக்ருத்யராய் ஸம்ஸாரத்தையும் பரமபத$_3$த்தையும் ஒக்க மறந்தார்; ஆழ்வாரைப் பார்த்து எம்பெருமான் “நீரிருக்கிறது ஸம்ஸாரத்திலே கிடீர்” என்றருளிச்செய்ய, அதின் கொடுமையை அநுஸந்தி$_4$த்து ஆற்றாமையாலே மநோவாக்காயங்களாலே எம்பெருமானை அநுப$_4$வித்து ஆற்றப்பார்த்தார்; அது பண்டையிலும் இரட்டியாய், மிகவுமாற்றாமையாலே எம்பெருமானுடைய ஶரண்யத்வத்தைப் பேசிக்கொண்டு, அதுக்கெல்லைநிலமான திருக்குடந்தையில் ஆராவமுதாழ்வார்

தமது மநோவாக்காயங்களாலே எம்பெருமானை அநுப$_4$வித்து ஆறுதலடையப் பார்த்தார் திருக்குறுந்தாண்டகத்திலே. மநோவாக்காயங்களாலே இவனை அநுப$_4$விக்க அநுப$_4$விக்க ஆசை மேன்மேலும் பெருகி மிகவும் ஆற்றாமை விளைகையாலே, எம்பெருமான் அனைவராலும் ஶரணமடையத் தக்கவன் என்பதைப் பேசிக்கொண்டு, ஶரணமடைவார்க்கெல்லாம் புகலிடமாகையாலே நம்மாழ்வாராலும் ஶரணமடையப்பெற்ற திருக்குடந்தையெம்பெருமானை ஆராவமுதாழ்வார் திருவடிகளையே எல்லாப்போதிலும் தமது இஷ்டப்ராப்திக்கும், அநிஷ்டம் நீங்குகைக்கும் உபாயமாகப் பற்றி முடிக்கிறார் இத்திருவெழுகூற்றிருக்கையிலே.

தி$_3$வ்யப்ரப$_3$ந்த$_4$ஸாரம் அவதாரிகை முற்றிற்று.

திருமங்கையாழ்வார் அருளிய

திருவெழுகூற்றிருக்கை

ஒருபேருந்தி யிருமலர்த் தவிசில்
ஒருமுறை யயனை யீன்றனை

ஒரு—ஒப்பற்றதாய், பேர்—பரப்புடையதான, உந்தி—திருநாபியிலுண்டான, இரு—பெரிதான, மலர்—(தாமரைப்) பூவாகிற, தவிசில்—ஆஸனத்தின்மீது, ஒரு முறை—ஒருகால் (ஸ்ருஷ்டிகாலத்தில்), அயனை—பிரமனை, ஈன்றனை—படைத்தருளினாய்.

திருவடிகளையே எத்த$_3$ஶைக்கும் இஷ்டப்ராப்திக்கும் அநிஷ்டநிவாரணத்துக்கும் உபாயமாகப் பற்றிமுடிக்கிறார்.

தி$_3$வ்ய-வ்யா:— (ஒரு பேருந்தி இருமலர்த் தவிசில் ஒரு முறை அயனை ஈன்றனை) தன்னைத் தவிர்ந்த எல்லாப்பொருள்களுக்கும் ஒப்பற்ற காரணமாய், அப்படிக் காரணமாகைக்குத் தகுந்த பெருமையை (பரப்பை) உடையதான திருநாபி$_4$யிலே, அதன் பரப்பு அனைத்தையும் அடைத்துக்கொண்டிருப்பதுபோலே பெருத்திருக்கிற தாமரைமலராகிற ஆஸநத்திலே, முன்னொருகால் (ஸ்ருஷ்டிகாலத்தில்) “ந ஜாயதே இதி அஜ:” [(மற்றவர்களைப்போல் ஸ்த்ரீபுருஷ ஸம்யோக$_3$த்தாலே) பிறக்காதவனாகையாலே அஜன் எனப்படுகிறான் பிரமன்] என்கிற வ்யுத்பத்தியின்படியே பிறப்புடைய மற்றவர்களைக் காட்டிலும் மிகவும் வேறுபட்ட பிறப்புடையவனாகையாலே அயன் (அஜன்) என்று பெயர்பெற்ற நான்முகனை உண்டாக்கினாய். ‘ஒருமுறை’ என்று ஸ்ருஷ்டிகாலத்தைச் சொன்னது ஒவ்வொரு ப்ரளயத்திற்குப் பின்பும் ஏற்படும் ஸ்ருஷ்டிகாலத்தைக் குறிக்குமாகையாலே, இந்த ப்$_3$ரஹ்மஸ்ருஷ்டி ப்ரவாஹரூபேண நித்யமாயிருக்கும் என்கை. இப்படி ப்$_3$ரஹ்ம ஸ்ருஷ்டியை இங்கு சொன்னது, உலகனைத்தின் ஸ்ருஷ்டிக்கும் உபலக்ஷணமாய் “நாவேக்ஷஸே யதி$_3$ ததோ பு$_4$வநாந்யமூநி நாலம் ப்ரபோ$_4$ ப$_4$விதுமேவ குத: ப்ரவ்ருத்தி:” [ஸ்தோ-ர 10] [எம்பிரானே! நீ கடாக்ஷியாவிடில் ஸ்ருஷ்டிகாலத்தில் இவ்வுலகங்கள் உண்டாகவே

(ஒரு பேருந்தியித்யாதி$_3$) ஜக$_3$த்து ப்ரளயங்கொண்ட காலத்து உன்னுடைய நிர்ஹேதுக க்ருபையாலே இவற்றினுடைய ஸத்தையை உண்டாக்கினவனே! (ஒருபேருந்தி) ப்ரதா$_4$நமாய் ஆத்$_3$யமாயிருந்த திருநாபி$_4$யிலே. (இருமலர்த் தவிசில்) பெரிய தாமரைப்பூவின் அல்லியிலே. (ஒருமுறை அயனை ஈன்றனை) ஒருகால் ஜக$_3$த்ஸ்ருஷ்டிக்கடியாக ப்$_3$ரஹ்மாவை உண்டாக்கினாய். இவற்றினுடைய ஸத்தாதி$_3$களை முதலிலேயுண்டாக்கின உனக்கே பா$_4$ரமன்றோ எல்லா ரக்ஷையுமென்கிறார். நீயுண்டாக்கின இதுக்கு ஒரு கு$_3$ணம் பிறப்பிக்க அரிதோ?

மாட்டா. உன்னையொழிய இவை எப்படிச் செயல்புரிய முடியும்?] என்கிற ரீதியிலே இவற்றின் ஸத்தையே உன்னதீ$_4$னமானபின்பு இவற்றின் கார்யத்தை நீயேயன்றோ செய்யவேண்டும் என்று உணர்த்துவதற்காக.

(ஒரு பேருந்தி....) உலகை ப்ரளயங்கொண்ட காலத்தில் உன்னுடைய நிர்ஹேதுக க்ருபையாலே இவற்றினுடைய ஸத்தையை உண்டாக்கினவனே! (ஒரு பேர் உந்தி) ‘ஒரு’ என்று எல்லாவுலகிற்கும் உத்பத்தி ஸ்தா$_2$னமாயிருக்கும் நாபி$_4$யினுடைய ப்ராதா$_4$ந்யத்தைக் காட்டுகிறது. “பேர்” என்று பழையதாயிருக்கும் பெருமையைக் காட்டுகிறது. (இரு மலர்த் தவிசில்) பெரியதான தாமரைப்பூவின் இதழிலே. (ஒருமுறை அயனை ஈன்றனை) முன்னொரு காலத்தில் லோகஸ்ருஷ்டிக்கு உறுப்பாகப் பிரமனைப் படைத்தாய். இவற்றினுடைய ஸத்தை முதலானவற்றை முதலிலே உண்டாக்கின உனக்கே பொறுப்பன்றோ இவற்றை எல்லாப்படியாலும் ரக்ஷிப்பதும் என்கிறார். நீ உண்டாக்கின இதற்கு ஒரு பெருமையை அளிப்பது உனக்கு அரிதோ?

(ஒருபேருந்தி) இத்யாதி$_3$—(ஒருபேருந்தி) முந்தினதுமாய் அதுதான் பழையதுமாயிருக்கை. (தவிசில்) அல்லியாய், இதழைச் சொல்லுகிறது.

வ்யா:—(ஒருபேரித்யாதி$_3$) நாம ரூப விபா$_4$கா$_3$நர்ஹமாய், தன்னோடு அவிப$_4$க்தமாயிருக்கிற இத்தை விப$_4$க்தமாக்கி, தமஶ்ஶப்$_3$த$_3$த்துக்கு வாச்யமாக்கி, அநந்தரம் ஸூக்ஷ்மரூபேண “அக்ஷரம், அவ்யக்தம்” என்கிற அவஸ்தை$_2$களைப் பிறப்பித்து, பின்னை மஹானாக்கி, அஹங்காரமாக்கி, தந்மாத்ரைகளாக்கி, பூ$_4$தங்களாக்கி, பௌ$_4$திகமான வர்ண(அண்ட?)ஸ்ருஷ்டியளவும் வரப்பண்ணி, பின்னை அவ்வருகுண்டான தே$_3$வாதி$_3$கார்யங்களையடங்கலும் அவன் முக$_2$த்தாலே பண்ணுவதாக முதலில் சதுர்முக$_2$னை உண்டாக்கினனையிற்று. முன்புள்ளவை யெல்லாம் தானே கைதொட்டுச் செய்து, பின்பு சதுர்முக$_2$னை அதி$_4$ஷ்ட்டி$_2$த்து நின்று செய்வானாகப் பார்த்

இங்கு ப்$_3$ரஹ்மஸ்ருஷ்டியைக் கூறுவதன்மூலம் அதற்கு முன்புள்ள ஸ்ருஷ்டிகள் அனைத்தும் உபலக்ஷிக்கப்படுகின்றன. அதாவது— பெயர், உருவம் ஆகியவற்றாலே பிரித்துக்காணவொண்ணாதபடி எம்பெருமானோடே ஒன்றியிருக்கையால் ‘அவிப$_4$க்த தமஸ்’ எனப்படும் மூலப்ரக்ருதியைப் பிரித்துக் காணத்தக்கதாய், விப$_4$க்ததமஸ் என்னும் பெயரையுடையதான ஸ்தூ$_2$லதத்துவமாக்கி, அதற்குப்பின் அதைக்காட்டிலும் சிறிதுசிறிதாக ஸ்தூ$_2$லநிலைகளான அக்ஷரம், அவ்யக்தம் என்னும் நிலைகளை அதற்கு உண்டாக்கி, அதற்குப்பின் மேன்மேல் ஸ்தூ$_2$லநிலைகளான மஹான், அஹங்காரம் என்னும் தத்துவங்களைப் பிறப்பித்து, அவ்வஹங்காரத்திலிருந்து ஶப்$_3$த$_3$ஸ்பர்ஶரூபரஸக$_3$ந்த$_4$தந்மாத்ரைகளையும், ஐம்பெரும்பூ$_4$தங்களையும் உண்டாக்கி, அந்த பூ$_4$தங்களாலான அண்ட$_3$த்தை ஸ்ருஷ்டித்து, தே$_3$வர், மனிதர், திர்யக், ஸ்தா$_2$வரம் என்னும் நாலுவகையான ஶரீரங்களை உடையவர்களான சேதனரை இவன் மூலமாகப் படைப்பதற்காக, முதலில் இந்நான்முகனை உண்டாக்கினனையிற்று. அண்ட$_3$த்தைப் படைப்பது வரையிலுள்ள ஸமஷ்டிஸ்ருஷ்டியைத் தானே தன் ஸங்கல்பத்தாலே செய்து, மேலுள்ள வ்யஷ்டிஸ்ருஷ்டியை இவனுக்கு அந்தர்யாமியாய் நின்று,

ஒரு முறை இருசுடர் மீதினி லியங்கா
மும்மதிளிலங்கை இருகால் வளைய
ஒரு சிலை யொன்றிய வீரெயிற்றழல்வாய்
வாளியின் அட்டனை;

ஒரு முறை—ஒரு தரங்கூட, இரு சுடர்—சந்திர ஸூர்யர்கள். (ப$_4$யத்தினல்) மீதினில் இயங்கா—மேலே ஸஞ்சரிக்க வொண்ணுததும். மும் மதிள்—நீர் அரண். மலை அரண். காட்டரண் என்கிற மூன்று அரண்களையுடையதுமான. இலங்கை—லங்காபுரியை இரு கால் வளைய—இரண்டு நுனியும் வளைந்த. ஒரு சிலை—ஒப்பற்ற சார்ங்க வில்லில். ஒன்றிய

தான்;முன்புsஅசித்தைக்கொண்டு கார்யங்கொண்டத்தோடு இவனைக் கொண்டு கார்யங்கொள்ளப் பார்த்தத்தோடு வாசியற்றிருக்கிறதாயிற்று இவனுக்கு. பாரதந்த்ர்யத்தில் வந்தால் இவனுக்கும் அசித் ஸாம்யமுண்டு, சேதநரான வாசியால் பெறுகிற ஏற்றம்—"கார்யத்துக்குக்கடவான் அவனே" என்று அறுதியிட்டிருக்கையாயிற்று.

செய்வதற்காக இவனைப் படைத்சான். ஸமஷ்டிஸ்ருஷ்டியில் ப்ரக்ருதியைக்கொண்டு மஹானையும். மஹானைக்கொண்டு அஹங்காரத்தையும். அஹங்காரத்தைக்கொண்டு தன்மாத்ரை முதலானவற்றையும் படைத்ததற்கும், இப்பிரமனைக்கொண்டு அண்ட$_3$த்திற்குள்ளிருக்கும் அசேதனப் பொருள்களையும். தேவர் முதலானுரையும் படைத்சதற்கும் ஒரு வாசியுமில்லை ஸர்வேஶ்வரனுக்கு. பாரதந்த்ர்யத்தைப் பார்க்கும்போது அவ்வசேதனப் பொருளுக்கும், சேதனனை இப்பிரமனுக்கும் பரிபூர்ணஸாம்யமுண்டு. பிரமன் முதலான அறிவுடைய சேதனர்க்கு அறிவற்றவற்றைக் காட்டிலும் உள்ள ஒரே ஏற்றம் "இவற்றை நமக்கு அந்தர்யாமியாயிருந்து நடத்துகிறவன் ஸர்வேஶ்வரனே" என்று அறுதியிட்டிருக்கையேயாகும்.

---

s (பா) அவற்றைக்கொண்டு

ஈர் எயிறு—பொருந்தியதும் இரண்டு பற்களையுடையதும், அழல் வாய்—நெருப்பைக் கக்குகின்ற வாயையுடையதுமான வாளியின்—அம்பினுல். அட்டனை—சுட்டொழித்தாய்.

(ஒருமுறையித்யாதி$_3$) தானுண்டாக்கின பயிருக்குக் களைபறிப்பானும் தானேயானாற்போலே, ஸ்ருஷ்டமான ஜக$_3$த்தை அழிவுசெய்யும் ராக்ஷஸரை நிரஸிப்பானும் தானே. (ஒருமுறை) ஒரு பர்யாயம். (இருசுடர்) சந்த்$_3$ராதி$_3$த்யர்கள். (மீதினிலியங்கா) மேலே ஸஞ்சரிக்க ப$_4$யப்படும்படியாய். (மும்மதிள்) கி$_3$ரிது$_3$ர்க்க$_3$ ஜலது$_3$ர்க்க$_3$ வநது$_3$ர்க்க$_3$

(ஒருமுறையித்யாதி) பிரிவுக்கு ஹேதுபூதனை ராவணனை அழியச்செய்தாள் பிராட்டியோ? நீயன்றே? ஒருகால் சந்த்$_3$ர ஸூர்யர்களுங்கூட மேலே ஸஞ்சரிக்கவும் அஞ்சும்படியாய், காட்ட

இனி அடுத்தபடியாக, தான் விளைத்த பயிருக்கு உழவன் தானே களைபறிப்பவனுமாவது போலே, படைக்கப்பட்ட உலகினை அழிக்கும் ராக்ஷஸரை அழிப்பவனும் இவனே என்கிறார்.—(இருசுடர் ஒரு முறை மீதினில் இயங்கா) சந்திரஸூர்யர்கள் ஒரு தரங்கூட (இவ்விலங்கையின்) மேலே ஸஞ்சரிக்க ப$_4$யப்படும்படியிருப்பதாய். "பீ$_4$ஷோதே$_3$தி ஸூர்ய:" [பரமாத்மாவிடம் ப$_4$யத்தால் ஸூர்யன் உதி$_3$க்கிறான்.] என்று பரமாத்மாவிடம் ப$_4$யத்தால் தப்பாமல் உதி$_3$த்து ஆகாயத்தில் ஸஞ்சரிக்கும் ஸூர்யனும், "நைநம் ஸூர்ய: ப்ரதபதி" [ரா-ப$_3$ா-15-10] [ராவணனை ஸூர்யன் (தன் கிரணங்களால்) கொளுத்துவதில்லை] என்கிறபடியே ராவணனிடம் ப$_4$யத்தால், இலங்கையின்மேல் ஸஞ்சரித்துத் தன் கிரணங்களால் கொளுத்துவதில்லை என்று கூறப்படுகிறதன்றோ. ஸூர்யனுக்குச் சொன்ன நியாயம் சந்திரனுக்கும் ஒக்குமாகையாலே, சந்திர ஸூர்யர்கள் ராவணனிடம் ப$_4$யத்தால் ஒருமுறைகூட இலங்கையின் மீது ஸஞ்சரியாமலிருந்தனர் என்கிறார். (மும்மதிள் இலங்கை) மலையரண், நீரரண், காட்டரண் என்கிற மூவகைப்

மென்கிற மூன்றையுமுடைத்தான. (இலங்கை) நினைத்தார்க்கு அஞ்சவேண்டும்படியான ராக்ஷஸர். குளவிக்கூடு சேர்ந்தாற்போலே சேர்ந்து அம்மணக்கூத்தடிக்கும் தே3ஶம். (இருகால்வளைய ஒரு சிலையொன்றிய ஈரெயிற்றழல் வாய் வாளியிலட்டனை) இரண்டு கோடியும் வளைந்துநிற்கும் ப்ரத4ானமான ஶ்ரீஶார்ங்க3த்திலே பொருந்தி, இரண்டெயிற்றையுமுடைத்தாய், நெருப்பையுமிழாநின்றுள்ள ஶரத்தாலே சுட்டுப்பொகட்டாய். (வாளியிலட்டனை) ப்3ரஹ்ம ஸ்ருஷ்டியைப்போலன்றியே, பத்தும்பத்தாக அம்பா

ரண், மலையரண், நீரரண் என்கிற மூன்று வகைப்பட்ட அரணை யுடைத்தாயிருக்கிற லங்கையை வில்லினுடைய கோடித்3வயமும் வளையும்படி அத்3விதீயமான ஶ்ரீஶார்ங்க3த்திலே பூட்டப்பட்டு, இரண்டெயிற்றையுமுடைத்தாய்த் தொடுக்கும்போது அம்பாய் எதிரிகள் மேலே தைக்கும்போது நெருப்பாய்த் தைக்கும் அம்பாலே முடித்தாய்.

பட்ட அரணையும் உடையதான இலங்கையை. (இலங்கை) நினைத்தவர்களெல்லாம் அஞ்சவேண்டும்படியான கொடுமையை உடைய அரக்கர். குளவிகள் கூடுகட்டிக்கொண்டு கூடியிருப்பதுபோலே சேர்ந்திருந்து அம்மணக்கூத்தடிக்கும் தே3ஶத்தையன்றோ அழித்தது. எப்படி அழித்தான்? எனில்: (இருகால் வளைய ஒருசிலை ஒன்றிய ஈரெயிற்று அழல் வாய் வாளியின் அட்டனை) இரு நுனியும் வளைந்து நிற்கும் ஒப்பற்ற சார்ங்கமென்னும் வில்லிலே பொருந்தியதாய், இரண்டு பற்களை உடையதாய், நெருப்பை உமிழ்கின்ற அம்பாலே சுட்டொழித்தாய். (அழல் வாய் வாளி) தொடுக்கும் போது அம்பாகத் தோன்றும். எதிரியின் மேலே விழும்போது நெருப்பாகப்பாயும். (வாளியின் அட்டனை) 'அயனை ஈன்றனை' என்றவிடத்தில் சொல்லப்பட்ட ப்3ரஹ்ம ஸ்ருஷ்டியைப்போலே ஸங்கல்பத்தால் செய்யாமல், போர்க்களத்தில் நேருக்கு நேரே நின்று அம்பால் எதிர்த்து

'' ஈரெயிறு ''—பிறைவாயம்பு.

லெதிர்த்துப் பிராட்டியினுடைய ஸம்ஶ்லேஷ விரோதி4யைப் போக்கினாற்போலே என்னுடைய விரோதி4களையும் போக்கவேணுமென்று கருத்து.

[அடைந்தவித்யாதி3] இவ்வாத்மாவுக்கு ஸ்வதஸ்ஸித்3த4மல்ல; அய:பிண்ட3த்தையும் அக்3நியையும் சேர்த்துவைத்தால் அந்யோந்ய ஸம்யோக3த்தாலே அதினுடைய பரமாணுக்கள் ஸூக்ஷ்மரூபேண அபி(ய?)த்திலே வந்து ஸங்க்ரமிக்கையினாலேயாதல், அன்றிக்கே அதினுடைய கு3ணத்தை ப4ஜிக்கையினாலேயாதல், அதினுடைய ஔஜ்வல்யத்தையும் வர்ணத்தையு முடைத்தாயிருக்குமாபோலே,

---

ராவணனைச் சித்ரவதை4 செய்தான் என்று கருத்து. (ஒரு முறை....அட்டனை) தன்னைப் பிரித்த பாவியான ராவணனை அழியச் செய்தவள் பிராட்டியல்லவே; நீயன்றோ! அது போலவே என்னை உன்னிடமிருந்து பிரிக்கும் இந்த ஸம்ஸாரத்தையும், அதற்கு மூலமான அவித்3யா கர்ம வாஸநா ருசிகளையும். நான் போக்கிக்கொள்ள இயலாது; நீயே போக்கித்தரவேணும் என்று கருத்து. இவ்விடத்திற்கு ஸம்வாத3மாக

''அடைந்த அருவினையோ டல்லல் நோய் பாவம்
மிடைந்தவை மீண்டொழிய வேண்டில்—நுடங்கிடையை
முன்னிலங்கை வைத்தான் முரணழிய முன்னொருநாள்
தன்வில் அங்கை வைத்தான் சரண்'' [முதல் திருவ 59]

என்னும் பாசுரம் அநுஸந்தி4க்கத்தக்கது. (அடைந்த அருவினை....) அருவினை முதலானவை இவ்வாத்மாவுக்கு இயல்வானவையல்ல; இரும்புருண்டையை நெருப்பிலேயிட்டுக் காய்ச்சினால், இரண்டும் ஒன்றோடொன்று சேர்ந்திருக்கையாலே அக்3னியின் பரமாணுக்கள் இரும்போடு சேருகையாலேயோ, அல்லது அக்3னியின் கு3ணத்தை இரும்பு அடைகையினாலேயோ இரும்புருண்டை அக்3னியின் ஒளியையும் நிறத்தையும் உடையதாவதுபோல், நித்யமான

நித்யமான ஆத்மவஸ்து அநாதியாயுள்ள அசித்ஸம்யோக3த்தாலே அந்த அசித்திலே அஹமபி4மாநத்தைப் பண்ணும்படி ப2லிக்கிற அவித்3யா கர்ம வாஸநா ருசிகள், அவையடியாகப் பரிக்3ரஹித்த ஶரீரத்தைப்பற்றி வரக்கடவதான ஆதி4வ்யாதி4, நிஷித்3த4ாநுஷ்ட்டா2நம், இப்படி கார்யமாயும் அடிகாணவொண்ணாதபடி (யும்?) கிடக்கிறவை, புதுப்புடைவையை அழுக்குக் கழற்றுமாபோலே க்ரமத்தாலே போகையன்றிக்கே ஒருகாலே ஸவாஸநமாகப் போக்க வேண்டில் [நுடங்கிடையை இத்யாதி3] அதுக்குச் செய்ய வேண்டுவதென்னென்ன, ப்ரப3ல ப்ரதிப3ந்த4கங்களை வருத்தமறப் போக்க வல்லவனைப் பற்றவடுக்கும். [நுடங்கிடையை] கண்

ஆத்மஸ்வரூபம்— அநாதி3யாயுள்ள அசித்ஸம்யோக3த்தாலே. அவ்வசித்தாகிற ஶரீரத்தையே தானாக நினைக்கச்செய்கின்ற அவித்3யையாகிற அஜ்ஞானமும். இதற்குக் காரணமான கர்மம், வாஸனை, ருசி ஆகியவையுமான இவையே அருவினை (அழிக்க அரிதான வினை) எனப்படுகின்றன. (அல்லல் நோய்) முற்கூறிய அருவினைகளால் ஏற்படும் ஶரீரஸம்ப3ந்த4த்தால் 'அல்லல்' [ஆதி4] எனப்படும் மனத்துன்பமும், 'நோய்' [வ்யாதி4] எனப்படும் ஶரீரத் துன்பங்களும் ஏற்படுகின்றன. (பாவம்) இந்த ஶரீரங்கொண்டு செய்கிற புண்யபாபங்களாகிற பாபம். முன் ஶரீரங்களால் செய்யப்பட்ட கர்மங்கள் 'அருவினை' என்று சொல்லப்பட்டு விட்டபடியால். இந்த ஶரீரத்தினால் செய்யப்படும் கர்மங்களே இங்கு 'பாவம்' என்னும் ஶப்3த3த்தால் குறிக்கப்படுகின்றன. (மிடைந்தவை) இவ்வண்ணமாக ஒன்றுக்கொன்று கார்யமாக அநாதி3காலமாகத் தொடர்ந்து வருகையாலே தொடக்கம் காணவொண்ணாதபடி நெருங்கியிருக்கும் இவை. (மீண்டு ஒழியவேண்டில்) புது வஸ்த்ரத்தை வெளுக்கச் செய்வதுபோலே படிப்படியாகச் செய்யாமல். பழைய வஸ்த்ரத்தை அழுக்குப்போக வெளுப்பதுபோலே ஒரே தடவையில் வாஸனையோடே இவையனைத்தும் போக வேண்டும் என்று நினைத்தால். இதற்குச் செய்யவேண்டுவது என்னென்னில்,— வலிய தடைகளை எளிதில் போக்க

டார்க்கு " என்னாய் விளையக் கடவதோ ? " என்று அஞ்சவேண்டும் படியான ஸௌகுமார்யத்தையுடைத்தான இடையையுடைய வளைக்கிடேர் பிரித்துவைத்தது என்கை. முன்பு லங்கையிலே கொடுபுக்குச் சிறைவைத்த ராவணன் மிடுக்கு அழியும்படியாக, மேக4த்திலே மின்னிறாற்போலே அழகிய திருக்கையிலே ஶ்ரீஶார்ங்க3த்தை வைத்தவன். எதிரிகளை அழியச்செய்கைக்கு ஒரு வ்யாபாரம் பண்ணவேண்டா, கையிலே வில்லை வாங்க அமையும். அழகிய திருக்கையிலே வில்லைப்பிடித்தவன் உபாயமென்னுதல்; "அவனை உபாயமாகப் பற்றுங்கோள்" என்று விதி4யாதல்; "நுடங்கிடையை முன்னிலங்கை வைத்தான்" என்றதுக்குக் கருத்தென்னென்னில்; ஈஶ்வர ஶேஷமான ஆத்மவஸ்துவை என்னதென்றிருக்கையாவது—

வல்லவனைப் பற்றவேண்டும் என்கிறார் மேலே — (நுடங்கிடையை) என்று தொடங்கி. (நுடங்கிடையை) துவளாநின்ற இடையை உடைய ஸீதாபிராட்டியை. பார்த்தவர்களெல்லாம். 'பெருமாளைப் பிரிந்து இப்படித் துவளும் இப்பிராட்டிக்கு என்ன ஆகப்போகிறதோ' என்று அஞ்சவேண்டும்படியான மெல்லிய இடையை உடைய இவளையன்றோ இப்பாவி பிரித்தான் என்கை. (முன் இலங்கை வைத்தான் முரண் அழிய) முன்னொரு நாளிலே இலங்கையிலே கொண்டுபோய்ச் சிறைவைத்த ராவணனுடைய வலிமை அழியும்படியாக. (முன் ஒருநாள் தன் வில் அங்கை வைத்தான் சரண்) மேக4த்திலே இந்த்3ரத4னுஸ் ஏற்பட்டாற்போலே அழகிய திருக்கையிலே வில்லை வைத்த இவனே [மிடைந்தவை மீண்டொழிய] உபாயமாவான். (முரண் அழிய வில் அங்கை வைத்தான்) எதிரிகளை அழியச் செய்ய வில்லை எடுத்து நாணேற்றி அம்பெய்யவும் வேண்டா; விற்பிடித்த பிடியிலே எதிரிகள் மண்ணுண்ணும்படியிருப்பவன் என்று கருத்து. (சரண்) வில்லை அழகிய கையிலே பிடித்தவன் உபாயம் என்றும் கொள்ளலாம்; அவனை உபாயமாகப் பற்றுங்கள் என்று பிறர்க்கு விதி4ப்பதாகவும் கொள்ளலாம். "நுடங்கிடையை முன்னிலங்கை வைத்தான்" என்றதற்குக் கருத்து

பிராட்டியைப் பிரித்த ராவணனோடொக்குமென்கை. தன்னைப் பற்றினார்க்கு, அவள் விரோதி$_4$யைப் போக்கினாற்போலே விரோதி$_4$யைப் போக்கிக் கொடுக்குமென்கை. அவளோடொத்த ப்ராப்தியும் அவன்பக்கல் இவனுக்குண்டென்கையும். அவனைப் பற்றுவார் அவள்முன்னாகப் பற்றுவதென்கையும்.

(ஒருபேருந்தி இத்யாதி$_3$) இல்லாதத்தை உண்டாக்கின உனக்கு உள்ளதுக்கு ஒரு கு$_3$ணாத$_4$ானம் பண்ணுகையரிதோ வென்கையும், பிராட்டியோட்டைக் கலவிக்கு விரோதி$_4$யான ராவணனை அழியச்செய்த உனக்கு என்னுடைய ப்ரதிப$_3$ந்த$_4$கம் போக்குகை அரிதோவென்கையும். (வாளியிலட்டனை) ப்$_3$ரஹ்ம ஸ்ருஷ்டிபோலே ஸங்கல்பத்தாலே செய்கையன்றிக்கே நேர்கொடு நேரே பூசலிலே நின்று அழியச்செய்தாய்.

என்னவெனில்; ஈஶ்வரனுக்கு அடிமைப்பட்ட ஆத்ம வஸ்துவை நாம் அநாதி$_3$காலமாக நம்முடையதாக நினைத்திருப்பது பிராட்டியைப் பிரித்த ராவணனுடைய செயலோடு ஒக்கும் என்று உணர்த்துகை. தன்னை உபாயமாகப் பற்றினார்க்கு, பிராட்டியின் விரோதி$_4$யான ராவணனைப் போக்கினாற்போலே தடைகளையெல்லாம் போக்கித் தன்னைக்கொடுப்பான் என்றும் கருத்து. பிராட்டியோடு ஒக்க உறவு இச்சேதனனுக்கு ஸர்வேஶ்வரனோடு உண்டென்று உணர்த்தவும், உபாயமாக அவனைப் பற்றும்போது புருஷகாரமான இவளை முன்னிட்டுப் பற்றவேணும் என்று உணர்த்தவும் 'நுடங்கிடையை' என்று தொடங்கி அவளைப் பேசுகிறார் என்றும் கொள்ளலாம்.

(ஒரு பேருந்தி) என்று தொடங்கி. 'இல்லை' என்னலாம்படி இருந்த பொருளை உண்டாக்கின உனக்கு, உள்ள பொருளான எனக்கு ஒரு பெருமையைத் தருகை அரிதல்ல என்று காட்டினார். (ஒருமுறை) என்று தொடங்கி. பிராட்டியோடு ஸம்ஶ்லேஷிப்பதற்குத் தடையாயிருந்த ராவணனை அழித்த உனக்கு, என்னுடைய தடைகளைப் போக்குகை அரிதல்ல என்று காட்டுகிறார்.

மூவடி நானிலம் வேண்டி
முப்புரி நூலொடு மானுரி யிலங்கு மார்வினின்
இருபிறப் பொருமாணாகி
ஒரு முறை யீரடி மூவுலகளந்தனை

ஒரு முறை—ஒருகாலத்தில், முப்புரி நூலொடு—பூணூலோடு கூட, மான் உரி—மான் தோலும், இலங்கு—விளங்காநின்ற, மார்வினின்—திருமார்பை உடைய, இரு பிறப்பு ஒரு மாண் ஆகி—ஒப்பற்ற ப்$_3$ராஹ்மண ப்$_3$ரஹ்மசாரியாகி. (மாவலியிடம் சென்று) நானிலம்—பூமியிலே, மூ அடி—மூன்றடி நிலத்தை, வேண்டி—யாசித்து. ஈர் அடி—இரண்டு திருவடிகளாலே. மூ உலகு—மூன்று லோகங்களையும், அளந்தனை—அளந்துகொண்டாய்.

(மூவடியித்யாதி$_3$) அம்பாலே ஸாதி$_4$க்கவொண்ணாதவிடம் அழகாலே ஸாதி$_4$த்தபடி சொல்லுகிறது. (மூவடி நால்நிலம் வேண்டி) நாலுவகைப்பட்ட பூ$_4$மியிலே மூவடியை

(மூவடியித்யாதி$_3$) அம்பாலழிக்க வொண்ணாத இடத்தை அழகாலும் இரப்பாலும் அழியச்செய்தபடி. ப்ரயோஜநாந்தரபரரான இந்த்$_3$ராதி$_3$களுடைய கார்யஞ்செய்த நீ உன்னையே ப்ரயோஜநமாக நினைத்திருக்கிற என் கார்யஞ் செய்யலாகாதோ? (மூவடி நால்நிலம் வேண்டி) ஈரடியாலே பூ$_4$மியையளந்து ஓரடிக்கு

இனி, ராவண ஸம்ஹாரத்தைப்போலே அம்பாலே செய்யமுடியாதபோது, அழகாலும், ஶீலகு$_3$ணத்தாலும் அடியார் கார்யம் செய்வான் என்று காட்டுகிறார்.—(மூவடி....) மற்ற பயன்களை விரும்பும் இந்திரன் முதலானார் காரியம் செய்த நீ, உன்னையே பயனாக நினைத்திருக்கும் என் கார்யம் செய்யலாகாதோ? (நால்நிலம் மூவடி வேண்டி)

(நானிலம்) கி$_3$ரி, வநம், த்$_3$வீபம், ஸமுத்$_3$ரம். ஆக நாலு வகைப்பட்ட பூ$_4$மி.

வேண்டி. (முப்புரி நூலொடு மானுரியிலங்கு மார்வினில்) ஒருகாளமேக$_4$த்திலே மின்னலை ஏறிட்டாற்போலே திருயஜ்ஞோபவீதமும், அத்தோடேகூடின க்ருஷ்ணாஜிநமும் விளங்காநின்ற திருமார்பையுடையையாய். (இருபிறப்பு)

அவனைச் சிறையிட்டு வைக்க நினைத்து மூன்றடியை இரந்தானாயிற்று. "நெய்தல், மருதம், முல்லை, குறிஞ்சி" என்றாற்போலே சொல்லுகிற அன்னலும் துன்னலுமான பூ$_4$மியை அர்த்தி$_2$த்து; இந்நாலிலும் ருஜீஷாம்ஶமாய்க் கழித்தது பாலைநிலமென்று சொல்லுவர்கள். இவர்க்கபி$_4$மதமும் நாலென்னுமிடம் தோற்றியிருந்ததிறே. (முப்புரியித்யாதி$_3$) மேக$_4$த்திலே மின்னினாற்போலே சாத்தின யஜ்ஞோபவீதமும் க்ருஷ்ணாஜிநமும் விளங்காநின்றுள்ள திருமார்வை உடையையாய், உபநயநம் பண்ணின புதுமை

"முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல்" என்று சொல்லப்படும் நாலுவகைப்பட்ட அன்னலும் துன்னலுமான (அஸாரமும், அல்பஸாரமுமான) நிலத்தில், இரண்டு அடியாலே உலகங்களை அளந்து, மூன்றாவது அடியாலே அவனைச் சிறையிட்டு வைக்க நினைத்து மூன்று அடியை யாசித்தானாயிற்று. காடும் அதைச்சார்ந்த இடமும் முல்லை; மலையும் அதைச் சார்ந்த இடமும் குறிஞ்சி; நாடும் அதைச்சார்ந்த இடமும் மருதம்; கடலும் அதைச்சார்ந்த இடமும் நெய்தல். "நானிலம் வாய்க் கொண்டு நன்னீர் அறமென்று கோது கொண்ட வேனில் அஞ்செல்வன் சுவைத்து உமிழ் பாலை" [திருவிருத்தம் 26] என்கிறபடியே நால்வகை நிலமும் கடும் வெயில் முதலானவற்றாலே தத்தம் தன்மை கெட்டுப் பயனற்ற பாலை நிலமாம் என்று கூறுவர். இவ்வண்ணமாகப் பாலைக்குத் தனியே நிலமில்லையாகையால் 'நானிலம்' என்றே கவிகளால் வழங்கப்படுவதையொட்டி, இவ்வாழ்வாரும் 'நானிலம்' என்றே பூ$_4$மியை வழங்குகிறார். (முப்புரி நூலொடு மானுரி இலங்கு மார்வினில்) ஒரு கார்மேகத்திலே மின்னல் ஒளியிடுவதுபோலே, சாத்தின பூணூலும், அத்துடன் கூடிய மான்தோலும் விளங்கும் திருமார்பை

த்$_3$விஜனுமாய். (ஒருமாணாகி) ஒப்பில்லாத ஸ்ரீ வாமநனாய்; தானே இன்னுமொருகால் இவ்வடிவுகொள்ளவேணுமென்னிலும் இப்படி வாயாத வடிவையுடையனாய். (ஒருமுறையீரடி மூவுலகளந்தனை) ஒருகால் இரண்டடியாலே மூன்று லோகத்தையும் அளந்துகொண்டாய். இத்தால்— "இந்த்$_3$ரனுக்கு ராஜ்யத்தை மீட்டுக்கொடுத்தாற்போலே என்னுடைய ஶேஷத்வத்தையும் மீட்டுத்தந்தருளவேணும்" என்கிறார். "தேவர்கள் சென்றிரந்தார்க் கிடர் நீக்கிய

தோற்றும்படியிருப்பாயுமாய், இந்த்$_3$ரனுடைய அர்த்தி$_2$த்வம் தலைக்கட்டுகைக்காக இட்டபோதோடு இடாதபோதோடு வாசியற முகமலர்ந்து போம்படி இரப்பிலே தகணேறின வாமந வேஷத்தைப் பரிக்$_3$ரஹித்து, ஒருகால் த்ரைலோக்யத்தையும் ஈரடியாலே

உடையையாய். (இருபிறப்பு) இரண்டாம் பிறப்பைத்தரும் உபநயனம் பண்ணின புதுமை தோற்றியிருப்பவனாய். (ஒரு மாண் ஆகி) ஒப்பற்ற ப்$_3$ரஹ்மசாரியாகி, இந்திரன் தன்னை யாசித்த பூ$_4$மியை அவனுக்குப் பெற்றுக் கொடுப்பதற்காக—பிச்சையிட்ட ஸமயத்தோடு. இடாத ஸமயத்தோடு வாசியில்லாமல் முகமலர்ந்து போம்படி இரப்பிலே தழும்பேறின ஒப்பற்ற வாமந ப்$_3$ரஹ்மசாரி வேஷத்தை எடுத்தான் என்கை. தானே மறுபடி ஒருமுறை இவ்வடிவு எடுக்கவேணுமென நினைத்தாலும் இப்படி அமையாது என்னலாம்படியான ஒப்பற்ற வடிவழகைச் சொல்லுகிறது. (ஒருமுறை ஈரடி மூவுலகு அளந்தனை) ஒரே ஸமயத்தில் இரண்டு அடியிலே மூன்று உலகத்தையும் அளந்துகொண்டாய்; இப்படிக் கூறுவதன்மூலம், "இந்திரனுக்கு அவன் விரும்பிய மூவுலக அரசை மீட்டுக்கொடுத்தாற்போலே, எனக்கு நான் விரும்பும் ஶேஷத்வ ஸாம்ராஜ்யமாகிற அடிசூடும் அரசை மீட்டுத்தந்தருளவேணும்" என்னும் கருத்தைக் காட்டுகிறார். "ஈட்டங்கொள் தேவர்கள் சென்று இரந்தார்க்கு இடர்நீக்கிய கோட்டங்கை வாமனன்" (திருவாய் 7-5-6) என்று உன்னை யாசித்தவர்க்

கோட்டங்கை வாமனனுய் ''என்று உன்னையிரந்தாரிரப்புக்கு நீயுமிரந்து அவர்கள் அபேக்ஷிதம் பார்க்குமவனல்லையோ? இசையாதார் தலைகளில் வைத்த திருவடிகளை இசைந்த என் தலையில் வைத்தாலாகாதோ? ப்ரயோஜநாந்தரபர னுடைய இழவுதீர்த்த உனக்கு அநந்ய ப்ரயோஜநனுன என்னுடைய இழவு தீர்க்கலாகாதோ? இந்த்3ரன் கழஞ்சு மண்ணன்ருே இழந்தது; நான் என்னையும் உன்னையுமன்ருே இழந்தது.

அளந்துகொண்டாய். ஆசையில்லாதார் தலைமேலேயும் வைக்கும் திருவடிகளை ஆசையுடைய என் தலையிலேயும் வைக்கலாகாதோ? இந்த்3ரனைப்போலே கழஞ்சுமண் பெறுதல், மஹாப3லியைப்போலே ஔதா3ர்யங்கொண்டாடுதல் செய்யவிருக்கிறேனே நான்? ''உன்னைப் பெறவேணும்'' என்றன்ருே நானர்த்திக்கிறது. உன்னைவைத்து வேறென்றை இரந்தார்க்கோ நீ இரப்பாளனுய்க் கார்யஞ்செய் வது? உன்னையே இரந்தார் கார்யம் செய்யலாகாதோ? "**मदीयमूर्धानमलङ्करिष्यति-कदा**" (மதீ3யமூர்த்த4ாநமலங்கரிஷ்யதி-கதா3) என்றிறே நானிருக்கிறது.

காக நீயும் யாசகனுகி அவர்கள் கார்யம் செய்பவனுயிற்றே. மற்ற பயனை விரும்பும் இந்திரனுடைய குறை தீர்த்த உனக்கு, உன்னையே பயனுகக்கொண்ட என் குறையைத் தீர்க்க முடியாதோ? இந்திரன் அஸாரமான மண்ணை யன்ருே இழந்தான். நான் என்னையும் உன்னையுமன்ருே இழந்து நிற்கிறேன். ஆசையில்லாதார் தலைமேலேயும் வைக்கும் திருவடிகளை, ஆசையுடைய என் தலைமேலேயும் வைக்கலாகாதோ? இந்த்3ரனைப்போலே அற்பமான மண்ணுசையோ, மஹாப3லியைப்போலே 'வண்மையிலே ஒப்பற்றவன்' என்னும் ஔதா3ர்யக3ர்வமோ கொண்டவ னல்லனே யான். உன்னைப் பெறவேணும் என்றல்லவோ நான் விரும்புகிறேன், உன்னைவிட்டு வேறென்றை விரும்பு வார்க்குத்தான் நீ யாசகனுகியும் கார்யம் செய்வாயோ? உன்னையே விரும்பினுர் கார்யம் செய்யலாகாதோ? ''அடிச்சி

நாற்றிசை நடுங்க வஞ்சிறைப் பறவை யேறி
நால்வாய் மும்மதத் திருசெவி
ஒருதனி வேழத் தரந்தையை
ஒருநாளிருநீர் மடுவுள் தீர்த்தனை

ஒரு நாள்—ஒரு காலத்தில், நால் திசை நடுங்க—நாலு திக்கிலும் உள்ள ஜனங்களும் நடுங்கும்படியாக. (பெரிய கோபத்தை அடைந்து) அம் சிறை பறவை ஏறி—அழகிய சிறகையுடைய கருடன் மீது ஏறிக்கொண்டு, நால் வாய்—தொங்குகின்ற வாயையும். மும்மதம்—மூவிடங்களில் மத3 நீர்ப்பெருக்கையும், இரு செவி—இரண்டு காதுகளையும் உடையவனுய், ஒரு தனி வேழத்து—துணையற்றவனுய் ஒப் பற்றவனுன கஜேந்திரனுடைய, அரந்தையை-துன்பத்தை, இரு நீர் மடுவுள்—ஆழமான நீரையுடைய மடுவின் (கரை யிலே எழுந்தருளி) தீர்த்தனை—போக்கியருளினுய்.

யோம் தலைமிசை நீ அணியாய் ஆழியங்கண்ணு உன் கோலப் பாதம்'' [திருவாய் 10-3-6] ''படிக்களவாக நிமிர்த்த நின் பாதபங்கயமே தலைக்கணியாய்'' [திருவாய் 9-2-2]

''கதா3 புந: ஶங்க2ரதா2ங்க3 கல்பக
த்4வஜாரவிந்தா3ங்குஶ வஜ்ர லாஞ்ச2நம் |
த்ரிவிக்ரம த்வச்சரணம்பு3ஜத்3வயம்
மதீ3யமூர்த்த4ாநமலங்கரிஷ்யதி ||'' [ஸ்தோ-ர31]

[திரிவிக்கிரமனே! சங்கு, சக்கரம், கல்பகவ்ருக்ஷம், கொடி, தாமரை, அங்குஶம், வஜ்ராயுத4ம், இவைகளை அடையாள மாக உடைய உன் திருவடித்தாமரையிணை என் தலையை எப்போதுதான் அலங்கரிக்கப்போகிறதோ?] என்று உன் அடிசூடும் அரசையன்ருே நான் ஆசைப்பட்டிருக்கிறேன் என்னும் கருத்துக்களும் தோற்றுகின்றன.

(நாற்றிசை யித்யாதி3) பெருமதிப்பரான இந்த்3ராதி3களுக்கேயோ அபேக்ஷிதம் செய்தசென்னில், அன்று; ஆபத்தும் விஶ்வாஸமும் என்கிறது அல்பமுண்டாஞல் தான் தண்ணியரான திர்யக்குகளுக்கும் அபேக்ஷிதஞ்செய்யுமென்கிறது. (நாற்றிசை நடுங்க) ஶ்ரீக3ஜேந்த்3ராழ்வானுடைய ஆபத்தை நினைத்துக் கலங்கின கலக்கத்தைக்கண்டு "ஜக3த்துக்கு என்ன மிறுக்குப்புகுகிறதோ?" என்று அறியாதே

பெருமதிப்பரான இந்த்3ராதி3களுக்காக உன்னையழியமாறிக் கார்யஞ் செய்தவளவேயோ? ஜந்மவ்ருத்தாதி3களால் குறைய நின்ற ஆனை இடர்பட்ட மடுவின் கரையிலே அரைகுலையத் தலை குலைய வந்து விழுந்தவனன்றோ? (நாற்றிசையித்யாதி3) "ஜக3த்ஸ்ருஷ்ட்யாதி3களுக்கும் ஸங்கல்பித்ததுக்கு அவ்வருகுண்டென்றறியாமையாலே, ஜக3து3பஸம்ஹாரத்துக்கும் அவ்வருகாயிருந்ததீ, இதொரு சீற்றமிருந்தபடியென்!" என்று இருந்ததே குடியாக

இனி சிறந்த ஜ்ஞாநஶக்திகளை உடைய இந்திரன் முதலானர்க்குத்தான் தன்னைத்தாழ்த்திக்கொண்டும் கார்யம்செய்வானே என்னும் கேள்வியெழுந்தவளவில், "அப்படியல்ல; ஆபத்தும் விஶ்வாஸமும் ஒரு சிறிது உண்டாஞல், பிறப்பு, ஒழுக்கம் முதலானவற்றில் மிகத்தாழ்ந்த விலங்குகளுக்கும்—அவையுள்ளவிடத்திற்குத் தானே நேரே அரைகுலையத் தலை குலைய ஓடிவந்து காரியம் செய்வான்" என்கிருர்—(நால்திசை நடுங்க) ஶ்ரீக3ஜேந்திராழ்வானுடைய ஆபத்தைக்கண்டு கலங்கிய கலகத்தின் மிகுதியைக்கண்டு 'உலகிற்கு என்னகேடு விளையப்போகிறதோ?' என்று அறியாமல் அஞ்சி நாலுதிசையிலுள்ள தே3வர், மனிதர் முதலான அனைவரும் நடுங்கும்படியாக. உலகனைத்தையும் ஸ்ருஷ்டிக்கும்போதுபோலே ஸம்ஹரிக்கும்போதுங்கூட ஸங்கல்பத்தாலேயே ஸம்ஹரிப்பதையும் சீற்றமில்லாமலிருப்பதையும் கண்டுபோந்த நாலுதிசையிலும் வாழும் ப்3ரஹ்மாதி3 சேதனர் அனைவரும் இக்கடுஞ்சீற்றத்தைக்கண்டு "ஐயோ! உலகனைத்தையும் ஸம்ஹரிக்கும்போதும் காணுத கோபமாயிருக்கிறதே! இப்படிப்பட்ட சீற்

நடுங்க. (அஞ்சிறைப் பறவையேறி) மிக்க அழகையும் வேக3த்தையும் உடைத்தான சிறகையுடைத்தான பெரிய திருவடி மேலே ஏறி. (நால்வாய் மும்மதத் திருசெவி ஒரு தனி வேழத்தரந்தையை) நாலாநின்ற வாயையும், மூன்று மத3த்தையும், இரண்டு செவியையு முடைத்தாய், வேறு துணையின்றிக்கே தன் மிடுக்கற்று நின்ற ஆனையினுடைய மஹாது3:க்க2த்தை. அரந்தை—து3:க்க2ம். (ஒரு

எல்லாருமஞ்சும்படியாக, மேருவுக்கினிய மேக4ம்போலே, அழகிய சிறகையுடைய பெரியதிருவடி திருத்தோளிலே ஏறி, பெரிய வேக3த்தோடே நாலா நின்றுள்ள வாயையுடைத்தாய், மூன்று வகைப்பட்ட மத3த்தையுடைத்தாய், இரண்டுசெவியை யுடைத்தாய், வேறு துணையின்றிக்கே அத்3விதீயமாயிருக்கிற ஆனை

றத்திஞல் என்ன விளையுமோ" என்று அஞ்சும்படியாக என்றபடி. (அம் சிறைப் பறவை ஏறி) 'கருமுகில் தாமரைக் காடு பூத்து, நீடு இருசுடர் இரு புறத்து ஏந்தி, ஏந்து அலர்த் திருவொடும் பொலிய, ஓர் செம்பொற் குன்றின்மேல் வருவபோல், கலுழன் மேல் வந்து தோன்றினன்' (கம்பராமாயணம் — திருஅவதாரப் படலம்] என்கிறபடியே செம்பொற்குன்ருன மேருமலையின்மேல் கார்மேகம் ஏறி வருவதுபோலே, மிக்க அழகையும் வேக3த்தையும் உடைய க3ருட3னுடையதோளின்மீது ஏறி, அரைகுலையத் தலைகுலைய ஓடிவந்ததைக் கூறுகிருர். இப்படி ஓடிவந்து ஸாதி4த்த காரியம் யாதென்பதைக் கூறுகிருர்—(நால் வாய் மும்மதத்து இரு செவி ஒரு தனி வேழத்து அரந்தையை) கையெடுத்துக் கதறுகையாலே கீழே தொங்குகின்ற வாயை உடையதாய், (இருகன்னங்கள், குறி ஆகிய) மூன்று அவயவங்களிலிருந்து பொழிகின்ற மத3நீரை உடையதாய், இரண்டு (அல்லது பெரிதான) செவிகளை உடையதாய், வேறு துணையற்றதாய், தன் ப3லம் அழிகையாலே போக்கடியற்ற நிலையிலே ஒப்பற்றதான ஆனையினுடைய பெருந்துன்பத்தை. அரந்தை—அரதி; துன்பம். (ஒரு நாள் இருநீர் மடுவில்

(வேழத்து — அரந்தை) — அரதி-து3:க்க2ம். (மும்மதம்)— கபோல மேட்4ரஸ்த்த2லத்ரயம்.

நாளிருநீர் மடுவுள் தீர்த்தனை) அத்த3ஸையிலே வேற்று நிலமாய்ப் பெரிய நீர்வெள்ளமான மடுவிலே தீர்த்தாய். ''முதலையின் வாயிலே நின்றும் ஆனையை மீட்டாற்போலே ஸம்ஸாரங்கொண்ட என்னையும் மீட்கவேணும்'' என்கிறார். "गज आकर्षते तीरे ग्राह आकर्षते जले। तयोर्द्वन्द्वसमं युद्धं दिव्यं वर्षसहस्रकम्॥" (க3ஜ ஆகர்ஷதே தீரே க்3ராஹ ஆகர்ஷதே ஜலே। தயோர்த்3வந்த்3வஸமம் யுத்3த4ம் தி3வ்யம் வர்ஷ ஸஹஸ்ரகம்॥) என்று—ஆனைக்கு முதலை ஒன்று. எனக்கு முதலை ஐந்து; அது மிடுக்கனை யானை. நான் து3ர்ப்ப3லனென்கிறார்.

யுடைய து3:க்க2த்தை—அத்த3ஸையிலே வேற்றுநிலமாய், மிக்க வெள்ளத்தை உடைத்தான மடுவிலே அரைகுலையத் தலைகுலைய வந்து விழுந்து போக்கினாய்.

தீர்த்தனை)ஒப்பற்றதோர் காலத்திலே,அடியானான யானைக்கு வேற்று நிலமாய், அவனுக்கு விரோதி4யான முதலைக்குத் தன் நிலமாய் மிகுந்த நீர்ப்பெருக்கையுடைய மடுக்கரைக்கே—அவ்வாபத்தின் க4னத்தைக்கண்டு அரைகுலையத் தலைகுலைய ஓடிவந்து ஆனையின் துன்பத்தைத் தீர்த்தருளினாய்.(ஒரு நாள்) இப்படி எம்பெருமானையே ஓடிவரச்செய்த அதுவும் ஒரு நாளே என்று நாளைக் கொண்டாடுகிறார். ''முதலையின் வாயில் நின்றும் ஆனையை மீட்டாற்போலே, ஸம்ஸாரத்தின் வாயில் விழுந்துகிடக்கும் என்னையும் மீட்கவேணும்'' என்று கருத்து. "யானை கரையை நோக்கி இழுக்கிறது; முதலை நீரைநோக்கி இழுக்கிறது; இப்படியாக அவ்விருவர்க்கும் தே3வ வருஷங்களில் ஆயிரம் வருஷம் ஒருவருக்கொருவர் ஸமமாகப் போர் நடந்தது'' [விஷ்ணுத4ர்மம் 69] என்கிற படியே ஆனைக்கு விரோதி4யான முதலை ஒன்று; எனக்கு விரோதி4யான இந்திரிய முதலைகள் ஐந்து. அது ப3லமுள்ள யானை; நான் வலிமையற்றவன். அது சிலகாலம் நோவு பட்டது; நான் அநாதி3காலமாக நோவுபடுகிறேன். எனக்கு உதவ அப்படி ஓடிவரவேண்டாமோ? என்கிறார்.

"ग्राहं चक्रेण माधवः" (க்3ராஹம் சக்ரேண மாத4வ:) மடுவிலே போய்ப்புக்கு ஆனையையும் முதலையையுமாக அணைத்துக் கொண்டு போந்து கரையிலேயேறி ஆனைக்கு நலிவுவாராதபடி திருவாழியாலே முதலையைக் கீறிப்பொகட்டானாயிற்று. ''ராஜபுத்ரனோடு வினையுண்ட கைக்கூட்டனுக்கும் பால் திரளையிடக்கடவது காண்'' என்று பட்டரருளிச் செய்யும்படி. ''நால்வாய்மும்மதத் திருசெவி ஒருதனி வேழத்தரந்தையை'' என்றாற்போலே சொல்லுவதுக்குக் கருத்தென்னென்னில், ப்ரஜை கிணற்றிலே விழுந்தால் ''காதுங்கண்டவாளியும், காலுந்தலையும், வடிவுமிருக்கும்படிகாண்!''

(வேழத்தரந்தையை இருநீர் மடுவுள் தீர்த்தனை) ''க்3ராஹம் சக்ரேண மாத4வ:'' [விஷ்ணுத4ர்மம்] [முதலையை மாத4வன் சக்கரத்தினால் அறுத்துக் கொன்றான்.] என்கிறபடியே. மிகவிரைவாக மடுவினுள் போய்ச்சேர்ந்து. ஆனையையும், முதலையையும் அணைத்துக்கொண்டுவந்து கரையேறி. ஆனைக்குக் கால்நகத்திற்குக்கூடச் சேதம் வாராதபடி அதிஜாக்3ரதையுடன் ஸுத3ர்ஸந சக்கரத்தைக் கொண்டு முதலையைக் கீறிப் போட்டானாயிற்று. பா4க3வத விரோதி4யான முதலையையும் அணைத்துக்கொண்டு கரையேற வேணுமோ? எனில்: ''ராஜபுத்ரனுக்கு மல்யுத்3த4ப் பயிற்சி தருவதற்காக அவனோடு தினந்தோறும் கைகலந்து சண்டையிடும் கைக்கூட்டனுக்கும் பால்சோற்றுருண்டை கொடுத்து வளர்ப்பார்களன்றோ. அதுபோலே, க3ஜேந்திராழ்வானோடு சண்டையிட்ட முதலைக்கும் ப4க3வானாலே அணைக்கப்படும் இப்பேறு கிடைத்தது'' என்று பட்டர் அருளிச்செய்வராம். (நால்வாய் மும்மதத்து இருசெவி, ஒருதனிவேழத்து) என்று யானையினுடைய ஒவ்வோரவயவத்தையும் ஸமுதா3யஸோபை4யையும் வர்ணிப்பதற்குக் கருத்து என்னவெனில்: கிணற்றில் விழுந்த குழந்தையைக் கரையேற்றிக் காப்பாற்றியவர்கள். ''ஆகா! இக்குழந்தையின் காது என்ன அழகு! கழுத்தின் வாளிப்பு (அமைப்பு)

என்பாரைப்போலே, இடர்பட்ட இதினுடைய அவயவங்கள் அவனுக்கு ஆகர்ஷகமானபடியாலே சொல்லுகிறது. (வேழத்தரங்தையை) எளியராயிருப்பார் நோவுபட்டாற்போலன்றிறே இதினுடைய நோவுபாடு. "**परमापदमापन्नः**" (பரமாபத3மாபந்ந:) ஸர்வேஶ்வரன் தன்னைப் பேணாதேவந்து விழவேண்டும்படி கரைபுரண்ட ஆபத்தாயிற்று. இவ்வாபத்துக்கு அவதி4யென்னென்னில், "**मनसाऽचिन्तयत्**" (மநஸாऽசிந்தயத்) வாயால் கூப்பிடுமதோவிற்று; (ஒரு

இருந்தபடியே! கால் என்ன அழகு! தலை என்ன அழகு! வடிவழகை வாய்கொண்டு வர்ணிக்க இயலவில்லையே! இழக்கவிருந்த இதை நல்லவேளையாகக் காப்பாற்றினோமே!" என்று ஒவ்வோரவயவத்தின் அழகையும், ஸமுதா3ய ஶோபை4யையும் சொல்லிச்சொல்லி மாய்ந்துபோவது போலே, எம்பெருமான் இடர்பட்ட இதைக் காப்பாற்றியவுடன் இதினுடைய ஒவ்வோரவயவத்திலும், ஸமுதா3ய ஶோபை4யிலும் ஈடுபட்டபடியைச் சொல்லுகிறது. (வேழத்து அரங்தையை) சிறிய ஶரீரமுடையார் துன்பம் போலே சிறிய துன்பமாயிராமல், "விரலுக்குத் தகுந்த வீக்கம்; யானைக்குத் தகுந்த வாதம்" என்று சொல்லுவது போலே, இதினுடைய பெரிய ஶரீரத்துக்கு ஏற்றபடி பெருந்துன்பமாயிருந்தபடி. "பரமாபத3ம் ஆபந்ந: மநஸாऽ-சிந்தயத் ஹரிம்" [விஷ்ணுத4ர்மம்] [பெரிய ஆபத்தை அடைந்த க3ஜேந்திராழ்வான் ஹரியை மனத்தினால் நினைத்தான்.] என்று ரிஷி இதினுடைய ஆபத்தின் மிகுதியைக் காட்டினார். ஸர்வேஶ்வரன் தன் பெருமை பாராமல் மடுக்கரையிலே வந்து விழவேண்டும்படியான கரைபுரண்ட ஆபத்து என்பதை 'பரமாபத்' என்னும் பத3த்தால் உணர்த்தினார். (மநஸாऽசிந்தயத்) என்று 'மனத்தினாலே நினைத்தான்' என்கையாலே, வாயாலே கூப்பிடவும் ஶக்தியற்று, மனத்தால் உபாயமாக நினைக்கும் நிலையை அடைந்தான் என்று காட்டினார். (ஒருநாள்....தீர்த்தனை) எம்

முத்தீ நான்மறை ஐவகை வேள்வி அறுதொழிலந்தணர் வணங்குந் தன்மையை

முத்தீ—மூவகையான அக்3நிகளையும், நால் மறை—நால் வகையான வேத3ங்களையும், ஐவகை வேள்வி—ஐவகையான யஜ்ஞங்களையும், அறு தொழில்—ஆறுவகையான கருமங்களையும் உடையரான, அந்தணர் வணங்கும் தன்மையை—ப்3ராஹ்மணர்களால் (கர்மயோக3த்தால்) ஆராதி4க்கப்படும் தன்மையை உடையனாயிராநின்றாய்.

நாள் இருநீர்மடுவுள் தீர்த்தனை) அங்கு காலம் அளவிட்டிருக்கும், முதலை ஒன்று, தான் ஆனை; இங்கோவென்றால்—காலமநாதி3, இந்த்3ரியங்களைந்து, நானோ து3ர்ப்ப3லன்; ஆனால் வாசி பார்த்துத்தர வேண்டாவோ? [காலைக் கதுவிடுகின்ற கயலொடு வாளை விரவி] ஆந்தராளர் குடியிலே பிறந்து, ஈஶ்வரன் மர்மஜ்ஞையாயிருப்பாளொருத்தி வார்த்தை—ஒரு நீர்ப்புழு நலியப் பொறுக்கமாட்டாதவன்; இரண்டுகிடாய் காலைப்பற்றி நலிகிறது என்கிறாள்.

பெருமானுக்கு அந்தரங்க3ரான பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளையாய், ஈஶ்வரனுடைய திருவுள்ளம் எதைச் சொன்னால் பதறும் என்னும் மர்மத்தை அறிந்த ஆண்டாள் "காலைக் கதுவிடுகின்ற கயலொடு வாளை விரவி" [நாச்-திரு 3-5] என்று "ஒரு நீர்ப்புழு க3ஜேந்திரனை நலிவதைப் பொறுக்காத நீ இரண்டு மீன்கள் என் காலைக் கவ்விக் கடிப்பதைப் பொறுத்திருக்கலாமோ?" என்றாற்போலே, "ஒரு முதலை வலிமைமிக்க க3ஜேந்திரனைச் சிலகாலம் நலிந்ததைப் பொறுக்காதவன், ஐந்து இந்திரியங்களாகிற முதலைகள் அநாதி3காலமாக வலிமையற்ற என்னை நலிவதைப் பொறுத்திருக்கலாமோ? அதைக்காட்டிலும் விரைவாக ஓடிவந்து ரக்ஷிக்கவேண்டாமோ?' என்னும் கருத்தைக் காட்டுகிறார் ஆழ்வார்.

(முத்தீயித்யாதி$_3$) உபாயாந்தர நிஷ்ட$_2$ர்க்கும் அவற்றை நடத்திக்கொடுப்புதியிறே. "योगो योगविदां नेता" (யோகோ$_3$ யோக$_3$விதா$_3$ம் நேதா) என்கிறபடியே. (முத்தீ) மூன்று பிள்ளை பெறுவாரைப்போலே கா$_3$ர்ஹபத்ய ஆஹ

(முத்தீயித்யாதி$_3$) வர்ணங்களில் உத்க்ருஷ்ட வர்ணமாய், நல்வழி போகக்கடவதாயிருக்கும் ப்$_3$ராஹ்மண ஜாதிக்கடைய ஆஶ்ரயணீயனாயிருக்கும்படியைச் சொல்லுகிறது. (முத்தீயித்யாதி$_3$)மூன்று பிள்ளைபெற்ற தாயைப்போலே, ஆஹவநீய கா$_3$ர்ஹபத்ய த$_3$க்ஷி

அந்தரங்கை$_3$யான பிராட்டிக்கு உதவியதை 'வாளியில் அட்டனை' என்றார்; ப்ரயோஜநாந்தரபரனை இந்திரனுக்கு உதவியதை 'மூவுலகளந்தனை' என்றார். அநந்யப்ரயோஜனனாய், அநந்யோபாயனை க$_3$ஜேந்திரனுக்கு உதவியதை 'மடுவுள் தீர்த்தனை' என்றார். இனி, தம் முயற்சியில் பற்று அருமையால், உபாயமல்லாத உபாயாந்தரங்களில் உபாயபு$_3$த்$_3$தி$_4$வைத்து, அவனோடுகூட அவற்றையும் உபாயமாகப் பற்றுவார்க்கும், அவர்கள் வழியே சென்று, ஒவ்வோரடியிலும் அவ்வுபாயங்களைத் தலைக்கட்டிவைத்து, அவர்கள் விரும்பும் ப$_2$லனை அளிக்கும் பெருமையைப் பேசுகிறார்.— (முத்தீ....) "யோகோ$_3$ யோக$_3$விதா$_3$ம் நேதா" [ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமம் 18, 19] [தானே உபாயமாகவும், மற்றவுபாயங்களைப்பற்றினார்க்கு அவற்றைத் தலைக்கட்டிக்கொடுப்பவனாயுமுள்ளவன்]என்று ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமத்திலும் தானே நிருபாதி$_4$க உபாயமாயிருக்கும் படியும், ஸோபாதி$_4$கமான உபாயங்களைப் பற்றினார்க்கு அவற்றைத் தலைக்கட்டிக்கொடுப்பவனாயிருக்கும் படியும் பேசப்பட்டதன்றோ. அவ்வுபாயாந்தரங்களில் முதலாவதான கர்மயோக$_3$த்தை அநுஷ்டி$_2$ப்பவராய், அதற்கு உறுப்பாக நாலு வர்ணங்களில் மிகவுயர்ந்த ப்$_3$ராஹ்மணவர்ணத்தில் பிறந்து நல்வழிநடக்கும் அந்தணர் அனைவராலும் அக்கர்மயோக$_3$த்தாலே ஆஶ்ரயிக்கத்தக்கவனாயிருப்பதை முதலில் பேசுகிறார்.— (முத்தீ) பெரும் பசியுள்ள மூன்று பிள்ளைகளை ஒரேப்ரஸவத்

வநீய த$_3$க்ஷிணாக்$_3$நிகளையும். (நான்மறை) ருக்$_3$ யஜுஸ் ஸாமாத$_2$ர்வணங்களையுமுடையராய். (ஐவகை வேள்வி) "देवयज्ञः पितृयज्ञो भूतयज्ञो मनुष्ययज्ञो ब्रह्मयज्ञः" (தே$_3$வயஜ்ஞ: பித்ருயஜ்ஞோ பூ$_4$தயஜ்ஞோ மநுஷ்யயஜ்ஞோ ப்$_3$ரஹ்மயஜ்ஞ:) என்னும் பஞ்சமஹாயஜ்ஞங்களையும்; இத்தால் கர்மயோக$_3$ம் சொல்லிற்று. (அறுதொழில்) யஜநம், யாஜநம், அத்$_4$யயநம், அத்$_4$யாபநம், தா$_3$நம், ப்ரதிக்$_3$ரஹமென்கிற ஷட்கர்

ணாக்$_3$நி என்கிற அக்$_3$நித்ரயமும், நாலுவகைப்பட்ட வேத$_3$ங்களும், பஞ்சமஹாயஜ்ஞமும், அத்$_4$யயநம்பண்ணுகை, பண்ணுவிக்கை, யஜிக்கை, யஜிப்பிக்கை, தா$_3$நம் பண்ணுகை, கொள்ளுகை என்றாற்

தில் பெற்றவள் அம்மூன்றையும் பேணமுடியாமல் திண்டாடுவதுபோலே, கா$_3$ர்ஹபத்யம், ஆஹவநீயம், த$_3$க்ஷிணாக்$_3$நி என்னும் மூன்று அநலங்களுக்கும் (எவ்வளவு விறகிட்டாலும் போதாதென்னும் அக்$_3$னிகளுக்கும்)ஒரேஸமயத்தில் பரிசர்யை பண்ணுகிறபடி. (நான்மறை) அக்கர்மயோக$_3$த்தை நன்கு அநுஷ்டி$_2$ப்பதற்குறுப்பாக ருக், யஜுஸ் ஸாமம், அத$_2$ர்வணம் எனும் நாலுவேத$_3$ங்களையும் ஓதியவர்கள். (ஐவகை வேள்வி) தே$_3$வயஜ்ஞம், பித்ருயஜ்ஞம், பூ$_4$தயஜ்ஞம், மநுஷ்யயஜ்ஞம், ப்$_3$ரஹ்மயஜ்ஞம் என்று [தைத்-ஆர 2-10] ஓதப்படும் ஐந்து வகையான யஜ்ஞங்களையும் தினந்தோறும் நடத்துகிறபடி. (அறுதொழில்) யஜநம் (தான் யாக$_3$ம் செய்தல்), யாஜநம் (பிறர்க்கு யாக$_3$ம் செய்வித்தல்), அத்$_4$யயநம் (தான் வேதமோதுதல்), அத்$_4$யாபநம் (பிறர்க்கு வேதம் ஓதுவித்தல்), தா$_3$நம் (பிறர்க்கு வேண்டியதை அளித்தல்) ப்ரதிக்$_3$ரஹம் (பிறரிடம் வேண்டியதைப் பெறுதல்)என்னும் ஆறுதொழில்களையும் உடையவராயிருக்கிறபடி. மற்ற வர்ணங்களுக்கு இவற்றில் சிலவற்றிலேயே அதி$_4$காரமுண்டு. இத்தால், அநுஷ்டி$_2$க்க அரிதான கர்மயோக$_3$ம் சொல்லப்பட்டது. ப்$_3$ராஹ்மணர்க்குரிய எல்லாப் பெருமைகளையும் பூர்ணமாகப் பெற்றிருப்பவர்களாக இவர்களைப் பேசுகையால், ஜ்ஞாநஸஹித கர்மயோக$_3$த்தை அநுஷ்டி$_2$ப்பவர்கள் இவர்கள் என்று

ஐம்புலன் அகத்தினுள் செறுத்து
நான்குடனடக்கி முக்குணத் திரண்டவை யகற்றி
ஒன்றினில் ஒன்றி நின்று
ஆங்கிருபிறப்பறுப்போர் அறியுந் தன்மையை

ஐம்புலன் — ஐந்து இந்திரியங்களை (வெளியில் பட்டி மேயவொண்ணுதபடி) அகத்தினுள் செறுத்து — உள்ளேயடக்கி. நான்கு உடன் அடக்கி — உண்ணுதல். உறங்குதல். அஞ்சுதல், விஷயபோ4க3ஞ்செய்தல் என்கிற நான்கையும் ஒன்ருக இல்லை செய்து. முக்குணத்து — ஸத்வம். ரஜஸ். தமஸ் என்கிற மூன்று கு3ணங்களில், இரண்டு அவை — ரஜஸ்ஸையும் தமஸ்ஸையும். அகற்றி — விலக்கி, ஒன்றினில் — ஸத்வகு3ணமொன்றிலேயே, ஒன்றி நின்று — பொருந்தியிருந்து. ஆங்கு — அப்படிப்பட்ட ப4க்தியோக3த்தால். இரு பிறப்பு அறுப்போர் — இருவகைப்பட்ட பிறப்புகளை நீக்கிக் கொள்ள வல்ல உபாஸகர்களாலே. அறியும் தன்மையை — அறியத்தக்க ஸ்வப4ாவத்தை உடையையாயிராநின்ருய்.

மங்களையுமுடையரான. (அந்தணர் வணங்குந்தன்மையை) அநந்யப்ரயோஜநரான ப்3ராஹ்மணராலே ஆஶ்ரயிக்கப்படும் ஸ்வப4ாவத்தையுடையையாய்.

போலே சொல்லுகிற இவற்றைத் தொழிலாக உடையரான ப்3ராஹ்மணர்க்கு ஆஶ்ரயணீயனுயிருக்கும்படி சொல்லிற்று.

விளங்குகிறது. (அந்தணர் வணங்கும் தன்மையை) இக்கர்ம யோக3த்தால் உன்னையே பெறவிரும்பி உன்னை ஆஶ்ரயிக்கும் ப்3ராஹ்மணர்களால் ஆராதி4க்கப்படும் தன்மையை உடையவனுயிருக்கிருய்.

இனி. அங்க3மான இக்கர்மயோக3த்தினுல் அடையப்படுவதாய். இதைக்காட்டிலும் மிகவும் செயற்கரிதாய், ஸம்ஸாரத்தைக்கண்டு ப4யந்து மோக்ஷமடைய விரும்பும்

(ஐம்புலனித்யாதி3) கர்மயோக3த்தை அங்க3மாக உடைத்தான உபாயம் சொல்லப்படுகிறது. (ஐம்புலனகத்தினுள் செறுத்து) சக்ஷுராதீ3ந்த்3ரியங்களை ஶப்3தா3தி3 விஷயங்களிலே போகாமே உள்ளேயடக்கி. (நான்குடனடக்கி) மநோ பு3த்3தி4 சித்தாஹங்காரங்களையும் செறுத்து; ஆஹாரநித்3ராப4யமைது2நங்களையும் தவிர்த்து என்றுமாம்.

இனி ஸம்ஸாரப4யபீ4தராய், முமுக்ஷுக்களாயிருப்பார்க்கு ஆஶ்ரயணீயனுயிருக்கும்படி சொல்லுகிறது,— (ஐம்புலனித்யாதி3) ஶ்ரோத்ராதி3களை விஷயங்களில் போகாதபடியாக நியமித்து, "நித்யாநித்யவஸ்துவிவேகம், ஶமத3மாதி3 ஸாத4ந ஸம்பத்து, இஹாமுத்ர

உபாஸகர் அநுஷ்டி2க்குமதான ப4க்தியோக3த்தால் அறியப்படுபவனுயிருக்கையைப் பேசுகிருர்,—(ஐம்புலன் அகத்தினுள் செறுத்து) மெய். வாய். கண். மூக்கு. செவி என்னும் ஐந்து வெளி இந்திரியங்களையும். ஶப்3த3ஸ்பர்ஶரூபரஸக3ந்த4ங்களாகிய வெளி விஷயங்களில் பட்டிமேயாதபடி செய்து உள்ளே அடக்கி; (நான்கு உடன் அடக்கி) உள்ளிந்திரியமான நெஞ்சின் நாலு நிலைகளையும் ஒரே சமயத்தில் அடக்கி. நெஞ்சு மனனம் செய்யும்போது 'மனம்' என்றும். அறியும்போது 'பு3த்3தி4' என்றும். சிந்திக்கும்போது 'சித்தம்' என்றும். அஹங்கரிக்கும்போது 'அஹங்காரம்' என்றும் வழங்கப்படும். இந் நான்கு நிலைகளையும் ஒருசேர அடக்கி. இத்தால் உள் வெளி இந்திரியங்கள் அனைத்தையும் அடக்குவதாகிற செயற்கரிய செயலைச் செய்யவேண்டும் இவர்கள் என்று உணர்த்தப்படுகிறது. (நான்குடனடக்கி) என்று ஸகல ப்ராணிகளுக்கும் பொது இயல்பான ஆஹாரம், நித்3ரை. ப4யம், மைது2நம் (ஆண் பெண் சேர்க்கை) என்னும் நான்கையும் இவர்கள் அடக்கவேண்டும் என்று கூறுவதாகவும் கொள்ளலாம். அல்லது. "நித்யாநித்யவஸ்துவிவேகம். ஶமம். த3மம் முதலான ஸாத4னச்செல்வம். (ப்ராக்ருதமான)

(முக்குணத் திரண்டவையகற்றி) கு₃ணத்ரயங்களில் ரஜஸ்தமஸ்ஸுக்களை த்யஜித்து. (ஒன்றினிலொன்றிநின்று) ஸத்வமொன்றிலுமே பொருந்திநின்று. (ஆங்கு) அந்த யோக₃த்திலே, (இருபிறப்பறுப்போ ரறியுந் தன்மையை) புண்ய பாபரூபமான கர்மங்களாலே வரும் ஸம்ஸாரத்தையறுக்கும் உபாஸகராலே அறியப்படும் ஸ்வபா₄வத்தையுடையையாய்.

ப₂லபோ₄க₃விராக₃ம், முமுக்ஷுத்வம்'' என்றாற்போலே சொல்லுகிற ஸாத₄நசதுஷ்டயத்தையுமுடையராய். அன்றிக்கே ஆஹாராதி₃களைத் தவிர்த்து. ஸத்வரஜஸ்தமஸ்ஸுக்களில் வைத்துக்கொண்டு ரஜஸ்தமஸ்ஸுக்களைக் கழித்து. நிஷ்க்ருஷ்ட ஸத்வத்தையுடையராய்க்கொண்டு நின்று, அந்த யோக₃த்தாலே புண்ய பாபரூப கர்மங்களடியான ஸாம்ஸாரிகது₃:க₂த்தை அறுத்துக்கொள்ள வேணுமென்றிருப்பார் அறியும் ஸ்வபா₄வத்தையுடையனாயிருக்கும்.

இம்மை மறுமைப்பயன்களில் விருப்பற்றிருக்கை. மோக்ஷமடைவதில் விருப்பமுடையவனாயிருக்கை'' என்கிற நான்கு மோக்ஷ ஸாத₄னங்களையும் தம்முள் கொண்டவராயிருப்பதைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். (முக்குணத்து இரண்டவை அகற்றி) ஸத்வம், ரஜஸ்ஸு தமஸ்ஸு என்னும் மூன்று ப்ராக்ருத கு₃ணங்களில், கீழ்நோக்கி இழுத்துச் செல்லும் ரஜஸ்தமஸ்ஸுக்களை மிகமுயன்று விலக்கி. (ஒன்றினில் ஒன்றிநின்று) எஞ்சிய ஸத்வகு₃ணம் ஒன்றிலேயே பொருந்தி நின்று. (ஆங்கு) அக்கர்மயோக₃ஸாத்₄யமான ப₄க்தியோக₃த்தாலே; (இருபிறப்பு அறுப்போர்) புண்யபாபமான இருவினைகளாலே ஏற்படும் புண்யஜந்மம், பாபஜந்மம் என்னும் இருவகைப்பட்ட பிறப்புக்களை அறுக்கின்ற உபாஸகர்களால்; (அறியும் தன்மையை) அறியப்படும் கு₃ணங்களை உடையை. இங்கு பிறப்பைச்சொன்னது ஸம்ஸாரத்துக்கு உபலக்ஷணம். (ஆங்கு பிறப்பு அறுப்போர்) என்று கூட்டி, 'ப₄க்தியோக₃த்தாலே பிறப்பறுப்போர்' என்றும் பொருள் கொள்ளலாம். அப்படியல்லாமல் (ஆங்கு அறியும்) என்று கூட்டி, 'ப₄க்தியோக₃த்திலே உபாஸகர் அறிகின்ற' என்றும் பொருள் கொள்ளலாம்.

முக்கண் நாற்றோள் ஐவாயரவோடு
ஆறுபொதி சடையோன்
அறிவருந் தன்மைப்பெருமையுள் நின்றனை

முக்கண்—மூன்று கண்களையும், நால் தோள்—நான்கு தோள்களையும், ஐவாய் அரவோடு—ஐந்து வாயையுடைய பாம்பையும், ஆறு பொதி சடையோன்—க₃ங்கா₃நதி₃ அமைந்த

இப்படியிருந்த யோக₃த்தாலே அநுப₄விக்கையாவது - ஸ்ரீக₃ஜேந்த்₃ராழ்வானுடைய மிடுக்குள்ள த₃ஶையோடொக்குமத்தனை; ஆனபின்பு அவனையே உபாயமாகப் பற்றிப் பிழைக்கவேணும்.

ஸாத₄நாந்தர பரிக்₃ரஹம் பண்ணினார் உன்னைப்பெற்றுப் போகாநிற்க, உன்னையே ஸாத₄நமாகப் பரிக்₃ரஹித்த நான் உன்னைப்பெறாதே போவதே!

"முக்தீ' என்று தொடங்கி இதுவரையில் சொன்னதின் கருத்து என்னவெனில்: "இப்படி செயற்கரிய ஜ்ஞாநஸஹித கர்ம ப₄க்தியோக₃ங்களாலே ஸம்ஸாரத்தைப் போக்கி எம்பெருமானை அனுப₄விக்க நினைக்கையானது—ஸ்ரீக₃ஜேந்திராழ்வான் தன் மிடுக்காலே முதலையை வென்று எம்பெருமானின் திருவடிகளில் பூவையிடப் பார்த்த நிலையோடு ஒக்கும். பெரும்பாலும் இழந்தேபோமித்தனை. ஆகையால் அவனையே உபாயமாகப் பற்றிப்பிழைக்கவேணும்'' என்றும், "செயற்கரியவாய், ஸ்வரூபவிருத்₃த₄ங்களாய், உண்மையில் மோக்ஷோபாயமல்லாதவையான ஸாத₄நாந்தரங்களைப்பற்றினவர்களிலும் சிலர் அரும்பாடுபட்டு உன்னைப் பெற்றுப் போகாநிற்க, ஸித்₃த₄மாய், ஸ்வரூபாநுரூபமாய், உண்மையான மோக்ஷோபாயமான உன்னை உபாயமாகப்பற்றிய நான் உன்னைப் பெறுதொழிவதே!" என்றும் கருத்துக்களை உள்ளடக்கி, "முக்தீ" என்று தொடங்கி, "அறியும் தன்மையை" என்பதீறாக அருளிச்செய்தாராயிற்று.

ஜடையையும் உடையனான ருத்$_3$ரனுக்கு. அறிவு அரு—அறிய இயலாத. தன்மை—ஸ்வப$_4$ாவத்தை உடையனா யிருக்கையாகிற. பெருமையுள்—பெருமையிலே. நின்றனை—இராநின்றாய்.

(முக்கணித்யாதி$_3$) தந்தாமுடைய கண்களில் மிகுதி யாலும் ஜ்ஞாநாதி$_4$க்யமென்கிற இதுவே ஏற்றமாகக் கணிசிப்பார்க்கும். அவர்களுக்கும் எட்டாத ஸ்வப$_4$ாவத்தை உடையவனென்கிறது. (முக்கண் நால்தோள்) மூன்று

அபி$_4$மாநிகளாயிருப்பார் எத்தனையேனும் அதிஶயித ஜ்ஞாநரா யிருந்தார்களேயாகிலும், அவர்களுக்கும் அறியவொண்ணாதபடி யான உத்கர்ஷம் சொல்லுகிறது.(முக்கணித்யாதி$_3$)லலாடநேத்ரனாய், "ஸர்வேஶ்வரன் நாலுதோளும் தானுமாயிருந்தான்" என்று

இனி, "உபாஸகர்களால் தத்தம் உபாஸநங்களில் அறியப்படும் கு$_3$ணங்களை உடையை என்று சொன்னது. அவர்கள் அறிந்தவாறு அநுஸந்தி$_4$த்தபடியைச் சொன்னதே யொழிய. அளவிட்டு அறிந்தபடியைக்கூறியதல்ல" என்று காட்டுவதற்காக. சிறப்புற்ற ஜ்ஞாநமுடைய ருத்$_3$ரனாலும் அளவிட்டு அறியப்படாத தன்மையுடையவன் என்பதைக் காட்டுகிறார்.—(முக்கண்...) ஸ்வாபதே$_3$ஶத்தில் அறிவைக் காட்டும் கண்களில் மிகுதியாலும், "ஈஶ்வராத் ஜ்ஞாநமந் விச்சே$_2$த்" [சிவனிடமிருந்து அறிவைப் பெறவிரும்பவேண்டும்] என்று பிறர்க்கு அறிவளிப்பவனாக ப்ரஸித்$_3$தி$_4$யிருப்பதாலும் தன்னைப்பேரறிவாளனாக அபி$_4$மானித்திருக்கும் ருத்$_3$ரன் தன் பெருத்த அறிவைக்கொண்டு அவனை அறியப் பார்த்தால். அந்த ருத்$_3$ரனுக்கும் எட்டாத இயல்வை உடையவன் என்கிறது. (முக்கண்) மூன்றுகண்களை உடையவன்; கண்களின் மிகுதி அறிவுமிகுதியைக் காட்டுகிறது. (நால்தோள்) ஸர்வேஶ்வரன் சதுர்பு$_4$ஜனாயிருப்பதைப் பார்த்துத் தானும் நாலு தோள்களோடு கூடியிருப்பவன்; ஶக்தியிலும் மிகுந்தவன் என்று காட்டுகிறது. "ஒன்றிரண்டு கண்ணினானும் உன்னை ஏத்தவல்லவனே" [திருச்

கண்களையும் நான்குதோளையுமுடையனாகையாலே ப$_3$ஹு பரிகரனாய்; (ஐவாயரவோடு ஆறு பொதி சடையோன்) ஐந்துவாயையுடைய பாம்பையும் க$_3$ங்கை$_3$யையும் ஏகதே$_3$ஶத்திலே அடக்கின ஜடையையுடையனாகையாலே. அதி$_4$க ஶக்தனாயிருந்துள்ள ருத்$_3$ரனும். (அறிவருந் தன்மைப் பெருமையுள் நின்றனை) இப்பிடார்கொண்டு அறியவொண்ணாத ஸ்வப$_4$ாவமாகிற பெருமையையுடையையாய் நின்றாய். ஆகையாலே "பெரிய கிழாயான ருத்$_3$ராதி$_3$கள்

தானும் நாலுதோளையுமுடையனாய், ஐந்துவாயை யுடைய அரவை யுடையனாய், க$_3$ங்கை$_3$யை அடக்கின ஜடையையுடையனான ருத்$_3$ரன். தன்னுயர்த்தியெல்லாம்கொண்டு அறியப்பார்த்தாலும் அறியவொண்ணாத ஸ்வப$_4$ாவமாகிற பெருமையை உடையை யாய்நின்றாய். கிழாயார் படுகிறது இதுவானால் நானுன்னை அறிகை யென்றொரு பொருளுண்டோ ?

சந்த 7] என்கிறபடியே இப்படி அறிவதற்கு உறுப்பான ஜ்ஞாந ஶக்திகள் மிகுந்தவனாலும் அறிய இயலாது என்று காட்டுவதன் மூலம் மற்றுள்ளார் அறிய ப்ரஸக்தியேயில்லை என்று உணர்த்துகிறார். (ஐவாய் அரவோடு ஆறுபொதி சடையோன்) ஐந்து வாயையுடைய பாம்பையும், க$_3$ங்கை$_3$யையும் ஒருபகுதியில் பொதிந்துகொண்டிருக்கும் சடையையுடையவன். இதுவும் இவனுடைய சக்தியின் மிகுதியைக் காட்டுகிறது. "அரவோடு ஆறு பொதி" என்றதால் இரண்டும் சடையிலிருப்பதைக் கூறுகிறதாகவுமாம்; அல்லது 'அரவோடு' என்றது அரவம் ஶரீரத்தில் இருப்பதைக் கூறுகிறதாகவுமாம். (அறிவரும் தன்மைப் பெருமையுள் நின்றனை) இந்த ஜ்ஞாநஶக்திகள் எல்லாம் கொண்டும் அறிய முடியாத ஸ்வப$_4$ாவமாகிற பெருமையை உடையவனாயிருந்தாய். இத்தால், "மிக்க ஜ்ஞாநஶக்திகளையுடைய பெருந்தலையான ருத்$_3$ரன் முதலானார் நிலையே இதுவானபின்பு அற்பமான ஜ்ஞாநஶக்திகளையுடைய என்னைப்போன்றவர்

கிழாய்-கிழாயான். மிஶ்ரரென்னுமாபோலே ஶ்ரேஷ்ட$_2$வாசகம். வ்யங்க்$_3$யோக்தி.

ஏழுல கெயிற்றினிற் கொண்டனை

ஏழ் உலகு—உலகங்களை யெல்லாம், எயிற்றினில் கொண்டனை—(ஸ்ரீ வராஹமாகி) த3ந்தத்தில் எடுத்துக்கொண்டாய்;

நிலை இதுவானால் க்ஷுத்3ரரான எங்களுக்குப் பெற விரகுண்டோ? நீயே விஷயீகரிக்குமித்தனை'' என்று கருத்து.

(ஏழுலகெயிற்றினில் கொண்டனை) ஆபத்து வந்தால் ஶக்தனோடு அஶக்தனோடு வாசியின்றிக்கே ஸர்வப்ராணிகளுக்கும் உதவியருளினாய். மஹாவராஹமாய்—ப்ரளயங்கொண்ட ஏழுலகத்தையும் திருவெயிற்றிலே வைத்தருளினாய். இத்தால், ''ப்ரளயங்கொண்ட பூ4மியையெடுத்

(ஏழுலகெயிற்றினிற் கொண்டனை) ஆபத்து வந்தவன்று அந்த ருத்3ராதி3களோ, நீயோ உதவினார்? ப்ரளயங்கொண்டு அண்ட3பி4த்தியிலே புக்குச் சேர்ந்த லோகங்களை மஹாவராஹமாய்ப் புக்கிடந்தெடுத்துத் திருவெயிற்றில் ஏகதே3ஶத்திலே ஒருநீலமணி

கள் அவைகொண்டு உன்னைப் பெற இயலுமோ? நீயே உனது நிர்ஹேதுக க்ருபையாலே எனக்கு அருள்புரிய வேணும்'' என்னும் கருத்தைக் காட்டுகிறார்.

(ஏழுலகு எயிற்றினில் கொண்டனை) இவ்வுலகிற்கு ப்ரளயத்தினாலே ஆபத்து வந்தபோது அந்த ருத்3ராதி3கள் உதவவில்லையே! நீயன்றோ உதவினாய். (ஏழுலகு) ஶக்தியுள்ள அந்த ருத்3ராதி3களோடு, நம்மோடு வாசியற அனைவரையும் ப்ரளயங்கொண்டபோது, அண்டச் சுவற்றிலே போய் ஒட்டிக்கொண்டிருந்த எல்லாவுலகங்களையும் சேற்றுக்கும் நீருக்கும் தயங்காத மஹாவராஹரூபத்தை எடுத்துக்கொண்டு புகுந்து குத்தியெடுத்து வெள்ளைத் தந்தத்தின் நுனியிலே—மல்லிகையிலே வண்டுபோலும், வெள்ளிப் பூணிலே ஒரு நீலமணியை அழுத்தினாற்போலும் ஒளி விடும்படி வைத்துக்கொண்டாய். இத்தால், ''ப்ரளயங்கொண்ட பூ4மியை எடுத்தாற்போலே, ஸம்ஸாரப்ரளயங்கொண்ட

கூறிய அறுசுவைப் பயனுமாயினை

கூறிய அறுசுவை பயனும் ஆயினை—(சாஸ்திரங்களில்) சொல்லப்பட்டுள்ள ஆறு வகை ரஸங்களாகிற ப்ரயோஜநமும் நீயேயா யிராநின்றாய்;

தாற்போலே ப4வார்ணவங்கொண்ட என்னையுமெடுத்தருள வேணும்'' என்கிறார்.

(கூறியவறுசுவைப்பயனுமாயினை) மநுஷ்யர்க்கு போ4க்3யமான ஷட்3ரஸரூபமான ப்ரயோஜநமானாய். ''என்னுடைய ப்ரயோஜநத்தையுமெனக்குத் தந்தருளவேணும்'' என்கிறார்.

அழுத்தினாற்போலே கிடக்கும்படி வைத்தாய். ஸம்ஸாரப்ரளயங்கொண்ட என்னையோ எடுக்கலாகாது?

(கூறியவித்யாதி3) ஶாஸ்த்ரங்களால் சொல்லப்படுகிற ஷட்3ரஸங்களினுடைய ப்ரயோஜநரூபமாயிருந்துவைத்து என்னுடைய ப்ரயோஜநத்தை எனக்குத் தரவேணும்.

என்னையும் எடுத்தருளவேணும்'' என்னும் கருத்தை உணர்த்துகிறார். '' ஏழுலகு '' என்றது மேலும், கீழுமுள்ள ஈரேழுலகங்களைக் கூறுவதன்மூலம் ஸகலலோகங்களையும் உபலக்ஷிக்கிறது.

